
# சிகாக்கோ சீக்ரெட்

## ராஜேஷ்குமார்



**1**

**சி**காக்கோ

மெரீன் டிரைவின் இடுப்புப் பகுதியில் இருந்தது அந்தத் தனியார் ஆஸ்பிட்டல். அதன் கிரானைட் உடம்பும், கண்ணாடிச் சதுரங்களும் பனி ஈரத்தில் திட்டுத் திட்டாய் வியர்த்திருந்தன.

சிதறிப்போன பலகாரத்தை ஈக்கள் மொய்ப்பதுபோல் கார் பார்க்கிங் பகுதியை விதம்விதமான மாடல்களில் பளபளப்பான கார்கள் மொய்த்திருந்தன. இதயத்தை அறுக்கும் டர்போ எஞ்சின் ஓசையுடன் அவ்வப்போது அந்த பார்க்கிங்கிலிருந்து கார்கள் வெளியேறுவதும்.. உள்ளே சொருகிக் கொள்வதுமாய் இருந்தன.

அகலமான கண்ணாடித் தடுப்புகளுக்கு அப்பால் இஸட் வடிவத்தில் ஒவ்வொரு மாடிக்கும் நகர்ந்து கொண்டிருக்கும் எஸ்கலேட்டர்கள் தெரிந்தன.

செம்பட்டை முடி அமெரிக்கர்கள் சுறுசுறுப்புடன் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆஸ்பிட்டலின் ஐ.சி.வார்டும்... அதனுள் ஐக்கியமாகியிருந்த ஆப்ரேஷன் தியேட்டரும்... நம் கவனத்திற்கு உரிய இடங்கள்.

ஆப்ரேஷன் தியேட்டரின் நெற்றியில் பிஸி என்ற சிவப்பு வார்த்தை அழுத்தமாய் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

உள்ளே ப்ளட் லைட் ஒரு நாற்பது வயது நோயாளியை வெளிச்ச வெள்ளத்தில் குளிப்பாடிக் கொண்டிருக்க - அவரது மூளை திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அதன் கபாலக் கொசகொசப்புகளிடையே டாக்டர் ஜேக்ஸனின் கைகள் பளபளப்பான ஸ்கால்ப்பெல்லை கவனத்தோடும் வேகத்தோடும் கையாண்டு கொண்டிருந்தன.

மாஸ்க்கின் உள்ளே உதடுகள் சிக்கியிருக்க - கண்கள் இமைக்காமல் பேஷண்ட்டின் மூளைப் பிரதேசத்தில் ஆணியடித்திருக்க குறிப்பறிந்து - நேரமறிந்து தகுந்த ஆயுதங்களையும்... மருந்துகளையும்... நர்ஸ்கள் அவர் கையில் சேர்ப்பித்துக் கொண்டே இருந்தார்கள்.

ஏறக்குறைய இரண்டரை மணி நேரப் போராட்டம்.

ஜேக்ஸனின் இயக்கங்கள் நின்றன.

பேஷண்ட்டுக்கு அருகில் பச்சைக் கோடுகள் வரைந்து கொண்டிருந்த ஈஈஜி கருவியில் கோடுகளின் நகரலைக் கொஞ்ச நேரம் கண்களால் விழுங்கினார்.

கரும்பச்சை முக உறையை முகத்தினின்றும் மெதுவாய் அகற்றிக் கொண்டே ஹெட்நர்சைப் பார்த்தார்.

''ஸ்டிச் பண்ணிவிடுங்கள்...''.



''எஸ் டாக்டர்...''

''தொடர்ந்து ஐ.சி. வார்டிலேயே வைத்திருங்கள்...''

''எஸ் டாக்டர்...''

''ஹிஸ்டரி கார்டில் உள்ள ப்ரிஸ்க்ரிப்ஷனைத் தொடருங்கள்...''

''ஆகட்டும் டாக்டர்...''

வாஷ் பேசனில் கைகளை சுத்தப்படுத்திக் கொண்ட ஜேக்ஸன் நாப்கினால் ஈரத்தை ஒற்றியெடுத்தபடியே ஆப்ரேஷன் தியேட்டரை விட்டு வெளியே வந்தார்.

வெளியே கோட் மிடி அணிந்த இளம் பெண் ஒருத்தி கண்களில் திரையிட்டிருந்த கண்ணீருடன் அவரை எதிர் கொண்டாள்.

அவளுடைய இரண்டு கைகளும் ஒரு சிறுவனையும், சிறுமியையும் அணைத்திருந்தன. அழகான அந்தக் குழந்தைகளின் முகங்களும் அழுகையில் சிவந்திருந்தன.

ஜேக்ஸனை வேகமாய் நெருங்கிக் கேட்டாள் அவள்;

''டாக்டர்...?''

''கம் டு மை ரூம்...''

''அவருக்கு...'

''என்னுடைய அறைக்கு வா... விபரமாகப் பேசலாம்...''

ஜேக்ஸனின் வேக நடைக்கு ஈடு கொடுத்து குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அவர் பின்னாலேயே போனாள் அவள்.

கைப்பிடிக் குமிழைத் திருகி - கனமான மரக் கதவை விரித்துக் கொண்டு - அந்த அறைக்குள் நுழைந்தார் ஜேக்ஸன்.

ஹீட்டரின் கதகதப்பை ரெகுலேட் செய்து விட்டு இருக்கையில் அமர்ந்து கொண்டவர், அவர்களுக்கும் நாற்காலிகளைக் காட்டினார்.

"டேக் யுவர் சீட்..."

அந்தப் பெண் சீட் நுனியில் உட்கார - அவளுக்கு இருபுறமும் இருந்த இருக்கைகளில் அவளுடைய குழந்தைகள் அமர்ந்தார்கள்.

"டாக்டர்... அவருக்கு..."

மறுபடியும் அவள் துவங்கியதும் - ஜேக்ஸன் கனத்த குரலில் பேச ஆரம்பித்தார்.

"கவலைப்பட வேண்டாம்... ஆப்ரேஷன் சக்ஸஸ்தான்... இன்னும் இரண்டொரு நாட்களில் உன்னுடைய கணவனுக்கு சுய நினைவு திரும்பிவிடும்..."

அவள் கண்களில் இப்போதும் கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது. ஆனால் அந்தக் கண்ணீரில் இப்போது மெலிதான சந்தோஷம் கலந்திருந்தது.

"தாங்க்யூ டாக்டர்... தாங்க்யூ வெரி மச்... பல மாதங்களாக கோமா நிலையிலிருந்த என்னுடைய கணவரின் உயிரைக் காப்பூாற்றியதற்கு நான் உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை... இன்னும் மூன்று நான்கு நாட்களில் அவர் இறந்தே போய்விடுவார் என்று எல்லா டாக்டர்களும் சொல்லிவிட்டார்கள்... உங்களைப் பார்க்கச் சொல்லி என் நண்பர்கள் யோசனை சொன்னார்கள்... மிகவும் கஷ்டப் பட்டுத்தான் உங்கள் அப்பாயின்மென்ட் வாங்கினேன்... மூளையில் ஒரு ஆப்ரேஷன் செய்து அவரைப் பிழைக்க வைக்க முடியும் என்று நீங்கள் சொன்னபோது என்னால் நம்ம முடியவில்லை... கிரேட்... ரியலி யூ ஆர் கிரேட்..."

"நான் என் கடமையைத்தான் செய்தேன்... இதற்காக நீ ரொம்பவும் சிலாகித்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை..."

"இல்லை டாக்டர்... நீங்கள் உங்கள் கடமைக்கு அப்பாற்பட்டு எங்களுக்கு உதவி



செய்திருக்கிறீர்கள்... என்னைப்போன்ற நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஹாஸ்பிட்டலில் காலடி எடுத்து வைக்கவே அருகதை இல்லை... இருந்தாலும் ஒரு நப்பாசையில் உங்களின் அப்பாயின்மென்ட் பெற்று உங்களை கன்சல்ட் செய்தேன்... என் நிலைமை தெரிந்து ஃபீஸ் வாங்கிக் கொள்ளாமல் இந்த ஆப்ரேஷனை செய்ய ஒப்புக் கொண்டீர்கள். ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் பேசி இதர பில் களிலும் கொஞ்சம் சலுகை பெற்றுத் தந்திருக் கிறீர்கள்... குறைந்த பட்சம் வார்த்தைகளிலாவது உங்களுக்கு நான் நன்றி சொல்லியே தீர வேண்டும்..."

"என்னுடைய மருத்துவ அறிவு பணம் சம்பாதிக்க மட்டும் பயன்பட்டால் அதில் என்ன இருக்கிறது...? ஒரு உயிரைக் காப்பாற்றப் பயன் பட்டால்தான் அதற்கு மரியாதை...! ஏழையோ... நடுத்தரவர்க்கமோ... பணக்கார வர்க்கமோ... அதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை... ஒரு உயிரைக் காப்பாற்றும் உபாயம் என் மருத்துவ அறிவுக்குப் புலப்பட்டால் எப்பாடுபட்டாவது அந்த உயிரை நான் காப்பாற்றியே தீருவேன்..."

அவள் பனி படர்ந்த விழிகளோடு குழந்தை யிடம் திரும்பினாள்.

"உங்கள் அப்பாவின் உயிரைக் காப்பாற்றிய டாக்டருக்கு நன்றி சொல்லுங்கள்..."

"தாங்க்யூ டாக்டர்..."

"டாடியை மீட்டுத் தந்ததற்கு நன்றி டாக்டர்..."

சன்னமான குரலில் இரண்டும் நன்றி தெரிவிக்க - ஜேக்ஸன் அவர்கள் கன்னங்களைத் தட்டி விடை கொடுத்தார்.

"ஓக்கே...நீங்கள் போகலாம்... இன்னும் ஒரு மாத காலத்திற்கு அவர் பெட் ரெஸ்ட் எடுக்க வேண்டும்... டயட்டில் அக்கறை எடுத்துக்

கொண்டால் அவருடைய மூளையைத் தாக்கிய அரக்கனை மீண்டும் எட்டிப் பார்க்கவிடாமல் தடுக்கலாம்...''

''கவனமாகப் பார்த்துக் கொள்ளுவோம் டாக்டர்...''

அவரிடம் கைகுலுக்கிவிட்டு அவர்கள் வெளியேறிச் சென்றபோது - இன்ட்டர்காம் சப்தத்தை நழுவ விட ஆரம்பித்தது.

ரிஸீவரை காதில் ஒட்ட வைத்தார் ஜேக்ஸன்.

''ஹலோ...''

''நான் ரிசப்ஷனிஸ்ட் பேசுகிறேன் டாக்டர்...''

''என்ன விஷயம்....''

''உங்களுக்கு ஒரு ஃபேக்ஸ் வந்திருக்கிறது... நீங்கள் இருக்கையில் இருக்கிறீர்களா... இல்லை ஆபரேஷன் தியேட்டரில் உள்ளீர்களா என்று தெரிந்து கொள்ளத்தான் கூப்பிட்டேன்... ஃபேக்ஸ் தகவலைக் கொடுத்தனுப்பவா...?''

''கொடுத்தனுப்பு... அதற்கு முன்னால் அந்த ஃபேக்ஸ் எங்கிருந்து வந்திருக்கிறது என்று பார்த்துச் சொல்...''

''தமிழ்நாடு...'' என்றாள் ஆங்கில அஸெண்ட்டில்.

''தமிழ்நாடு...? எங்கிருக்கிறது...?''

''இந்தியா...''

''இந்தியாவிலிருந்து ஃபேக்ஸா...?''


''ஆமாம்...''

''என்ன தகவல்...?''

''அவசரம்... மிக அவசரம்... ஒரு விஐபியின் உயிரைக் காப்பாற்ற நீங்கள் உடனே இந்தியா வுக்கு வரவேண்டும்...''

கொஞ்சம் திகைப்போடு ரிசீவரைப் பார்த்தார் ஜேக்ஸன்.





# 2

**வி**ழா மண்டபம் ஜனக் கூட்டத்தினால் நிரம்பி இருந்தது.

முதலமைச்சர் கதிர்வாணன் மேடையில் நடுநாயகமாய்ப் போடப்பட்டிருந்த அலங்கார நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

அடுத்தடுத்த இருக்கைகளில் பிற அமைச்சர்கள் கஞ்சி போட்ட வேஷ்டி சர்ட் களோடும் கட்சிக் கரை துண்டோடும் உட்கார்ந்திருந்தார்கள்.

யாரோ ஒருவர் மைக்கை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு வளவளத்துக் கொண்டிருந்தார்.

''தமிழகத்தின் மூலை முடுக்குகளை எல்லாம் பூதக்கண்ணாடி கொண்டு அலசி... சாதனையாளர்கள் எந்த மூலையில் இருந்தாலும் கண்டறிந்து அவர்களுக்குப் பணமுடிப்பைப் பரிசாய்த் தந்து அவர் தம்மை ஊக்குவிக்கும் தலைவர் கதிர்வாணன் அவர்களின் பண்பு பார் முழுக்கப் போற்றத்தக்கது... இத்தகைய தகை நிறைந்த வள்ளல் தலைவனை இனி தமிழகத்தில் எந்தக் கொம்பனாலும் அசைக்கவே முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிறேன்...''

கதிர்வாணன் சைகையால் அழைக்க - மேடையின் மூலையில் நின்றிருந்த ஒருவர் அவசரமாக அவருக்கு அருகில் வந்தார்.

சேருக்குப் பின்னாலிருந்து பவ்யமாய் அவரிடம் குனிந்தார்.

''என்ன தலைவரே...?''

''யார் இந்த ஆள்...?''

''வட்டச் செயலாளரோட மச்சினன்... மைக் கிடைச்சா அவ்வளவு சுலபத்தில் விடமாட்டான்... ஆனா நல்லாப் பேசுவான்...''

''கொஞ்சம் வளவளன்னு பேசறதைக் குறைச்சிக்கச் சொல்லு...''

''சரிங்க தலைவரே...''

''எனக்கு நேரமாயிட்டே இருக்கு...''

''அடுத்து பணமுடிப்பு வழங்கும் நிகழ்ச்சி தான் தலைவரே... அவனை கட் பண்ணிடச் சொல்றேன்...''

அந்த நபர் மைக் ஆசாமியை நெருங்கிக் கிசுகிசுக்க - மைக் ஆசாமி - சட்டென்று சுருதி குறைத்தான்.

''இத்துடன் எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்... வாழ்க தமிழ்... வாழ்க தலைவர்... நன்றி... வணக்கம்...''

கூட்டம் ஆரவாரித்தது.

அதைத் தொடர்ந்து -

''இப்போது தலைவர் கதிர்வாணன் சாதனை யாளர்களுக்கு பணமுடிப்பை வழங்குவார்...''

அறிவிப்பு வெளியிடப்பட - ஆரவாரத்தின் வீரியம் அதிகமானது.

கைகைளக் கூப்பியபடியே - வாய் நிறையப் புன்னகையோடு தன் இருக்கையை விட்டு எழுந்தார் கதிர்வாணன். காமிராக்கள் பளிச் பளிச்சென்று வெளிச்சத்தைத் துப்பியது. வீடியோ ப்ளட் லைட்கள் மஞ்சள் பிரகாசத்தை மேடையில் நிரப்பின.

மேடையின் விளிம்புக்கு வந்து - இரண்டு கைகளையும் உயர்த்தி அசைத்தார்.

வாழ்க கோஷங்கள் கூரையைப் பதம் பார்த்தன.

சாதனையாளர்களின் பெயர்களையும்... அவர்களின் சாதனையையும் மைக்கில்



அறிவிக்கத் துவங்க - ஒவ்வொருவராய் வந்து கதிர்வாணனிடம் பணமுடிப்பைப் பெற்றுக் கொண்டு கை கூப்பி வணங்கிச் செல்ல ஆரம்பித்தார்கள். ஒன்றிரண்டு பேர் காலில் விழுந்தார்கள்.

ரயில் விபத்தை தகுந்த சமயத்தில் தடுத்த ஆடு மேய்க்கும் இளைஞன்...

தீ விபத்தின் போது தைரியமாகப் பணியாற்றி பலரைக் காப்பாற்றிய ஒரிருவர்...

தங்கள் தங்கள் துறைகளில் சாதனை ஆற்றிய ஒரு சிலர்...

பட்டியல் நீண்டு கொண்டே சென்றது.

மைக்கில் அறிவிப்பவர் சற்றே இடைவெளி கொடுத்துச் சொன்னார்.

''இப்போது வித்தியாசமான மூன்று சாதனை யாளர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்து கிறோம்... மற்றவர்களைப் பொறுத்தவரை அவ்வப்போது சாதனை ஆற்றியவர்களாக இருந்தார்கள்... ஆனால் இவர்களைப் பொறுத்த வரை வாழ்வதே சாதனைதான்...யாருடைய ஆதரவும் இல்லாம் தாங்களே ஒருவருக்கொருவர் ஆதரவாக வாழும் நந்தினி... சாந்தினி... யாமினி...''

அவர் அறிவித்ததும் - முன் வரிசை யிலிருந்து அந்த மூன்று பெண்களும் எழுந்து மேடையை நோக்கி வந்தார்கள்.

ஒரு காலை இழந்த நந்தினி தாங்கு கட்டையின் உதவியால் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தாள்.

வாய் பேச முடியாத சாந்தினி - கண் தெரியாத யாமினியை ஆதரவாகப் பிடித்துக் கூட்டி வந்தாள்.

அவர்கள் மேடைக்கு வந்ததும் - அறிவிப்பாளர் வார்த்தைகளைத் தொடர்ந்தார்.

''இந்த மூன்று பெண்களும் வெவ்வேறு
வகையில் உடல் ஊனமுற்றவர்கள்... இவர்கள்
யாரையும் நம்பி இருக்காமல் யாருடைய
ஆதரவையும் எதிர்பார்க்காமல் ஆளுக்கொரு
தொழில் செய்து... தங்களைத் தாங்களே
காப்பாற்றிக் கொள்கிறார்கள்... கால் ஊனமுற்ற
நந்தினி ஓவியம் வரைந்து சம்பாதித்துக்
கொண்டிருக்கிறாள்... ஊமைப் பெண் சாந்தினி
கூடைகள் பின்னும் கைத்தொழிலைச் செய்து
கொண்டிருக்கிறாள்... கண் பார்வை இல்லாத
யாமினி பப்ளிக் டெலிபோன் பூத் வைத்திருக்
கிறாள்... உடல் ஊனத்தைப் பொருட்படுத்தாமல்
- பிறரை நம்பாமல்... கௌரவமான தொழில்
செய்து வாழ்க்கை நடத்தி வரும் இவர்கள் மூன்று
பேரைப் பற்றிய செய்தியை ஒரு வாரப் பத்திரிகை
மூலமாக அறிந்து கொண்ட தலைவர் சாதனை
யாளர் பட்டியலில் இவர்களையும் சேர்த்துக்
கொள்ளச் சொன்னார்... இவர்கள் மூன்று
பேருக்கும் தலா பத்தாயிரம் மதிப்புள்ள
பணமுடிப்பைத் தலைவர் பரிசாக வழங்குவார்...

கதிர்வாணன் தன் வியப்பையும் பாராட்
டையும் தெரிவித்தபடியே - மூன்று பேருக்கும்
தனித்தனியே பண முடிப்பை வழங்கினார்.

மேடையிலிருந்த இன்னொரு நப
அவர்களை அவசரப்படுத்தினார்.

''பண முடிப்பை வாங்கிட்டு இந்தப்
படிக்கட்டு வழியா கீழே இறங்கிப் போயிடுங்க...''

மூன்று பேரும் கீழே போகவில்லை.

நந்தினி கதிர்வாணனைப் பார்த்து
சொன்னாள்.

''ஸார்... எங்க மூணு பேர் சார்பா நான்
மைக்கில் பேச விரும்பறேன்...''

''தலைவருக்கு நேரம் ஆச்சு...''

யாரோ சப்தமிட - கதிர்வாணன் சப்தமிட்ட
ஆசாமியைக் கையமர்த்தினார்.



''நீ பேசும்மா...''

நந்தினி... சாந்தினி.. யாமினி... மூன்று பேரும் மைக்கிற்கு அருகில் வந்தார்கள். நந்தினி தொண்டையைச் செருமிக் கொண்டு குரலை வெளியிட ஆரம்பித்தாள்:

''ஓட்டுக் கேட்க மட்டுமே மக்களைச் சந்திப்பது இன்றைய அரசியல் தலைவர்களின் தலையாய பண்பாடு... அப்படிப்பட்ட அரசியல் தலைவர்கள் மலிந்து கிடக்கும் இந்தக் காலகட்டத்தில் திரு.கதிர்வாணன் அவர்கள் வித்தியாசமான தலைவர்... நேர்மையான தலைவர்... ஓட்டு வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை நோக்கி மட்டும் செயல்படாமல் அதற்கு அப்பாற்பட்டு மனித நேயத்தோடு பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார்... அதன் மூலம் அடிக்கடி மக்களைச் சந்திக்கவும் செய்கிறார்... அப்படிப்பட்ட தலைவர் ஒருவர் நம் மாநிலத்திற்கு முதலமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருப்பது நாம் செய்த பாக்கியமே ஆகும்...''

கைதட்டல் பெருக்கெடுக்க - சில விநாடிகள் இடைவெளி விட்டு - பிறகு வார்த்தைகளைத் தொடர்ந்தாள் நந்தினி.

''அவர் எங்களுக்குப் பணமுடிப்பை வழங்க இருப்பதாகத் தகவல் அளித்தபோது... இந்தப் பண முடிப்பை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்ற தயக்கம் எங்கள் மூன்று பேருக்குமே ஏற்பட்டது... யாரையும் சார்ந்திருக்காமல் கௌரவமாக வாழ்க்கை நடத்தி வருவதற்காகத்தான் இந்தப் பரிசைத் தர முன் வந்திருக்கிறார்கள்... பரிசை வாங்கிக் கொண்டால் எங்கள் சொந்த உழைப்பில் வாழ்கிறோம் என்ற தனித்தன்மையை இழந்துவிட்டது போல ஆகிவிடாதா என்ற எண்ணமே தயக்கத்திற்குக் காரணம்... ஆனால் கண் தெரியாத யாமினி எங்கள் இருவரின் மனக் கண்ணையும்

திறந்துவிட்டாள்... 'ஒரு பரிசு என்பது வெறும் பணம் மட்டும் இல்லை... அது ஒரு செய்தி... இப்படி மூன்று பேர் வாழ்கிறார்கள் என்று இன்னும் பலருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப் படும் செய்தி... இப்படித் தன்னம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு பரிசும் பாராட்டும் தானாகத் தேடிவரும் என்ற அரிய தகவலை மக்களுக்குக் கொண்டு போகும் நிகழ்ச்சி இது... ஆகவே அதற்காகவாவது நம் முதல்வர் திரு.கதிர்வாணன் அவர்கள் தரும் இப்பரிசை மேடையில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று யாமினி எங்களுகுகு எடுத்துச் சொன்னதை ஏற்றுக் கொண்டு இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்வதென்று தீர்மானித் தோம்.. வாங்கிக் கொண்டுவிட்டோம்... அதே சமயம் இந்தப் பணத்தை நாங்கள் எடுத்துக் கொள்ளப்போவதில்லை... ஊனமுற்றவர்களை ஆதரிக்கும் சமூக சேவை நிறுவனத்திற்கு அப்படியே மொத்தமாகக் கொடுத்துவிடுவது என்றும் தீர்மானம் செய்திருக்கிறோம்... ஏனெனில் எங்களுடைய உழைப்பால் நாங்கள் நல்ல நிலைமையில்தான் இருக்கிறோம்... நகரின் முக்கியப் பகுதியில் ஃப்ளாட்டை வாடகைக்கு எடுத்து ஓரளவு வசதியாகவே வாழ்ந்து வருகிறோம்... எங்களை விட மோசமான நிலை யிலிருக்கும் ஊனமுற்ற சகோதர சகோதரிகளுக்கு இந்தப் பணம் பயன்பட்டால் அதுவே எங்களுக்கு பெரிய மகிழ்ச்சியைக் கொடுக்கும்...''

அதே மேடையில் ஒரு தொண்டு நிறுவனத்திற்குப் பணத்தை நன்கொடையாகக் கொடுத்துவிட்டு மேடையை விட்டு இறங்கினார்கள் நந்தினி... சாந்தினி... யாமினி.

கூட்டம் நெகிழ்ந்து போய் கை தட்டக் கூட திராணியற்று உட்கார்ந்திருந்தது.

அடுத்தடுத்த நபர்கள் மேடைக்கு அழைக்கப் பட்ட பின்புதான் கூட்டத்தில் நிலவிய இறுக்கம் தளர்ந்தது.



தொடர்ந்து பண முடிப்பை வழங்க ஆரம்பித்த கதிர்வாணர் சட்டென்று சக அமைச்சர் ஒருவரைக் கூப்பிட்டார்.

''தலை சுத்தற மாதிரி இருக்குய்யா... கிறுகிறுன்னு வருது... பரிசை உக்காந்து தரட்டுமா...?''

இருளடைந்து கிடந்த அவருடைய முகத்தைப் பார்த்துப் பதட்டமடைந்தார் அந்த அமைச்சர்.

''என்னாச்சு தலைவரே...?''

''ரெண்டு மூணு மாசமாவே எனக்கு உடம்பு சரியில்லாமத்தான் இருக்கு.. அடிக்கடி தலை சுத்தல்.. இன்னிக்கு கொஞ்சம் அதிகமா இருக்கிற மாதிரி இருக்கு...''

''டாக்டரைப் பார்த்துடலாம் தலைவரே...''

''இன்னும் கொஞ்ச பேர்தானே இருக்காங்க... அவர்களுக்கும் பரிசைக் கொடுத்துட்டு...''

''நீங்கதான் ஆரம்பிச்சு வெச்சிட்டீங்களே... வேற யாரையாவது வெச்சு கன்டினியூ பண்ணிக்கச் சொல்லலாம்... உங்க மூஞ்சியே என்னவோ போல இருக்கு...''

அவர் சொல்லச் சொல்லவே - கதிர் வாணனால் அதற்கு மேல் நிற்க முடியவில்லை.

கண்கள் இருட்டத் துவங்க... தலைக்குள் ஒவ்வொரு மில்லி மீட்டர் பரப்பும் ஊசி முனைகளாக மாறிக் குத்தத் துவங்க... அப்படியே மேடையிலேயே சரிந்து விழுந்தார் கதிர்வாணன்.



## 3

ஆஸ்பத்திரி சிப்பந்தி ஒருவர் ஃபேக்ஸ் காகிதத்தைக் கொண்டு வர - அதை எடுத்துக் கொண்டு அவசர நடையில் தன்னுடைய

அறையை விட்டு வெளியேறினார் டாக்டர் ஜேக்சன்.

வராந்தாவின் மறுகோடி வரை நடந்தவர் - அங்கே இருந்த ஆஸ்பிட்டல் டைரக்டரின் அறைக்குள் பிரவேசித்தார்.

காரட் நிறத்தில் நல்ல பருமனோடு இருந்த டைரக்டர், கண்ணாடியை நாசியின் மேல் சரியாய் உட்கார வைத்துக் கொண்டே குரலை வெளியிட்டார்.

"வாருங்கள் டாக்டர் ஜேக்சன்..."

அவர் மேஜைக்கு அருகே வந்ததும் - எதிர் இருக்கையைக் காட்டினார்.

"ப்ளீஸ்... டேக் யுவர் சீட்..."

"தாங்க்யூ..."

சொல்லிக் கொண்டே ஜேக்சன் அமர - டைரக்டரின் கேள்வி தொடர்ந்தது.

"கோமா நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஒரு பேஷண்ட்டுக்கு இன்று நீங்கள் ஆப்ரேஷன் செய்வதாக இருந்தது... என்று நினைக்கிறேன்..."

"ஆப்ரேஷன் சக்ஸஸ்ஃபுல்லாக நடந்து முடிந்துவிட்டது..."

டைரக்டர் புன்னகைத்தார்.

"ஆப்ரேஷன் முடிந்துவிட்டுது என்று நீங்கள் சொன்னாலே போதும்... சக்ஸஸ்ஃபுல்லாக முடிந்துவிட்டது என்று கூட இரண்டு வார்த்தைகள் சேர்க்க வேண்டியதே இல்லை... ஏனென்றால் நீங்கள் கை வைத்தால் அந்த ஆப்ரேஷன் சக்ஸஸ்ஃபுல்லாகத்தான் முடியும்..."

"நீங்கள் என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்... என்னால் ஓரளவுக்குத்தான் போராட முடியும்... எனக்கு மேலே எல்லாம் வல்ல இறைவன் இருக்கிறான்... ஒரு உயிர் போவதும்... பிழைப்பதும்... என் கையில் மட்டும் இல்லை... அவனுடைய கருணையிலும் இருக்கிறது..."

டைரக்டர் சப்தமாகச் சிரித்தார்.

"எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை ஜேக்சன்... உங்களுடைய வார்த்தைகளை தன்னடகத்தின் வெளிப்பாடாக வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்... பை த பை என்ன விஷயமாக என்னைப் பார்க்க வந்தீர்கள்...?"

"எனக்கு ஒரு ஃபேக்ஸ் வந்திருக்கிறது..."

"என்ன விஷயம்...?"

அந்த ஃபேக்ஸ் காகிதத்தை அவரிடம் நீட்டினார் ஜேக்சன்.

அதன் மேல் சில விநாடிகள் பார்வையைப் போட்டிருந்த டைரக்டர் ஏதோ சொல்ல ஆரம்பித்த போது - டெலிபோன் கதற ஆரம்பித்தது.

ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"என் பெயர் அழகேசன்... கெம்ப் அக்ரோ இன்கார்ப்போரேட்டட் கம்பெனியில் கெமிக்கல் என்ஜினியராகப் பணியாற்றுகிறேன்... உங்கள் ஆஸ்பத்திரிக்குத் தேவையான கெமிக்கல்கள் குறித்து நாமிருவரும் ஏற்கெனவே ஒரு முறை சந்தித்துப் பேசியிருக்கிறோம்..."

"ஞாபகம் இருக்கிறது... அந்த ஆர்டரை உங்கள் நிறுவனத்திற்குத்தான் நான் கொடுத்தேன் மிஸ்டர் அழகேஷ்...உங்கள் சர்வீஸ் எனக்குத் திருப்திகரமாக இருந்தது..."

"தாங்க்யூ வெரிமச்..."

"இப்போது என்ன விஷயமாக போன் செய்தீர்கள்...?"

"பிசினஸ் நிமித்தமாய்க் கூப்பிடவில்லை... ஒரு பர்சனல் விஷயமாக உங்களிடம் பேச விரும்புகிறேன்..."

"என்ன விஷயம் சொல்லுங்கள்..."

''சிகாகோ தமிழ்ச் சங்கத்தில் நான் ஒரு முக்கிய உறுப்பினர்...தமிழ்ச் சங்கம் சார்பாக உங்களிடம் ஒரு கோரிக்கையை எடுத்து வைக்க விரும்புகிறேன்...''

''என்ன கோரிக்கை...?''

''உங்கள் ஆஸ்பிட்டலில் பணிபுரியும் டாக்டர் ஜேக்ஸனை உடனே நீங்கள் இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும்...''

''சென்னையிலிருந்து ஒரு ஃபேக்ஸ் வந்தது...''

''எஸ்... அது விஷயமாகத்தான் நானும் பேசுகிறேன்...'

''ஒரு முக்கிய விஜபியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று ஃபேக்ஸில் கேட்டிருந்தார்கள்...''

''ஆமாம்... அவர் மக்கள் செல்வாக்குப் பெற்ற ஒரு தலைவர்... நல்ல தலைவர்... ஒரு மகாணத்தின் முதலமைச்சராக இருக்கிறார்... திடீரென்று உடல்நிலை பாதிக்கப்பட்டு இப்போது கோமா நிலையில் இருக்கிறார்... உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் இருப்பதாக அங்கிருக்கும் டாக்டர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்... டாக்டர் ஜேக்ஸன் ஒருவரால்தான் முதலமைச்சர் கதிர்வாணனின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்று சீஃப் டாக்டர் சொல்லிவிட்டார்.... உங்கள் ஆஸ்பிட்டலுக்கு ஃபேக்ஸ் அனுப்பிவிட்டு... என்னைத் தொடர்பு கொண்டார்கள்... சிகிச்சை அளிக்க ஜேக்ஸன் புறப்பட்டு வர முயற்சி மேற்கொள்ளுமாறு என்னிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்...''

டைரக்டர் யோசனை மவுனத்தில் சில விநாடிகளை மிதக்க விட - அழகேசன் தொடர்ந்து பரபரத்தார்.

''இந்த மருத்துவ சிகிச்சைக்காக எவ்வளவு தொகை வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறார்கள்...''




''பணம் மட்டுமே பிரதானமில்லை... இங்கே அவருடைய ஷெட்யூல் என்ன... வேறு ஆப்ரேஷன்கள் இருக்கிறதா... இவர் இந்தியாவுக்கு வந்து சிகிச்சை அளிக்கும் அளவுக்கு பேஷண்ட்டின் நிலைமை மோசமாக உள்ளதா... - இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும்...''

''அவர் உடல் நிலை குறித்த ரிப்போர்ட்களை உடனே எங்களுக்கு ஃபேக்ஸில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கிறேன்... ப்ளீஸ்... நீங்களும் டாக்டர் ஜேக்ஸனும் நினைத்தால் அவர் உயிரைக் காப்பாற்ற முடியும்...''

''ஆல்ரைட்... மெடிக்கல் ரிப்போர்ட்களை உடனே அனுப்பச் சொல்லுங்கள்... இன்று மாலைக்குள் ஒரு முடிவெடுத்துவிடலாம்...''

''ஒரு உயிர்... அதுவும் விவிஜபியின் உயிர்... ஒரு நல்ல அரசியல் தலைவரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் மனதில் நினைத்து நல்ல முடிவாக எடுங்கள்.''



## 4

அந்தத் தனியார் ஆஸ்பத்திரியின் ஸ்பெஷல் வார்டில் சுய நினைவு இல்லாமல் மரக்கட்டை மாதிரிக் கிடந்தார் கதிர்வாணன்.

சைரன்கள் அலற காரில் வந்திருந்தார் கவர்னர். உணர்வுகள் அற்றுப் போய்க் கிடக்கும் கதிர்வாணனைக் கவலையோடு பார்த்தவர், தலைமை டாக்டர் சரணிடம் திரும்பினார்.

''என்ன ஆச்சு...?''

''மிஸ்டர் கதிர்வாணனோட குடும்பத்துக்கு மெடிக்கல் சூப்பர்விஸன் நாங்கதான் பார்க்கிறோம்... மூணு மாசமாவே இவருக்கு உடம்பில் ப்ராப்ளம் இருக்கு...''

''என்ன ப்ராப்ளம்...?''

''ப்ரஷர்...''

''ட்ரீட்மென்ட் எடுத்துகிட்டு வந்தாரா...?''

''ட்ரீட்மெண்ட் தந்துட்டிருந்தோம்... ஆனா ஒரு பேஷண்ட் குணமாகறதுக்கு வெறும் மெடிசின் மட்டும் போதாது...எங்களோட ப்ரிஸ்க்ரிப்ஷனை சரியா ஃபாலோ பண்ணணும்... தேவைப்படற அளவுக்கு ரெஸ்ட் எடுக்கணும்... டயட் சரியா இருக்கணும்...''

''கதிர்வாணன் உங்க ரெக்கமண்டேஷன்சை ஃபோலோ பண்ணலையா...?''

''ஆமா...அவர் மிகப் பெரிய பொறுப்பில் இருந்ததனால எங்க எச்சரிக்கையை மீறி ஓய்வு இல்லாம உழைச்சிட்டு இருந்தார்... சரியான தூக்கம் இல்லை... நேரத்துக்கு சாப்பிடறதில்லை... இதெல்லாம் வெரி டேஞ்சரஸ் டு பி.ப்பீ பேஷண்ட்ஸ்...''

''அதனால சிவியரா அட்டாக் ஆயிடுச்சா...?''

''ஆமா ஸார்... ப்ரெயினில் ஒரு ப்ளட் வெஷுலில் கசிவு ஏற்பட ஆரம்பிச்சிருக்கு... அதனாலதான் கோமா ஸ்டேஜுக்குப் போயிட்டார். அந்தக் கசிவின் அளவு பெரிதாயிட்டே வந்திட்டிருக்கு... ஒரு ஸ்டேஜில் உயிருக்கே ஆபத்தா முடிஞ்சிடும்... அதுக்கு முன்னாடி ப்ரெயினில் ஒரு சர்ஜரி செஞ்சா கதிர்வாணனோட உயிரைக் காப்பாத்தலாம்...''

''உடனே அதைச் செய்யலாமே...?''

மெல்லிய தயக்கத்தோடு சரண் சொன்னார்.

''அந்த சர்ஜரியை இங்கே இருக்கும் டாக்டர்களால் செய்ய முடியாது...அதை வெற்றிகரமாகச் செய்ய ஒரே ஒருவர்தான் இருக்கிறார்...''

''யார் அவர்...?''

''டாக்டர் ஜேக்ஸன்...''



''டாக்டர் ஜேக்ஸன்...? எங்கிருக்கிறார்...?''

''சிகாக்கோவில் இருக்கிறார்...''

''உடனே அவரை வரவழைக்கலாமே...?''

''அவரை வரவழைப்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை... மிகவும் பிசியான டாக்டர் அவர்...அவசியம் என்றால் மட்டுமே வெளிநாடுகளுக்கு வந்து சர்ஜரி செய்வார்...''

''மிஸ்டர் கதிர்வாணனை சிகாக்கோ அழைத்துப் போய் சிகிச்சை அளிக்க முடியுமா...?''

''அதற்கு அவர் உடல் நிலை இடம் அளிக்காது...''

''அப்படியானால் டாக்டர் ஜேக்ஸனை வரவழைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா?''

''ஆமாம்... ஃபேக்சில் தகவல் அனுப்பி யிருக்கிறோம்... கதிர்வாணனின் மெடிக்கல் ரிப்போர்ட்களை கேட்டார்கள்... அதையும் அனுப்பி வைத்திருக்கிறோம்... சிகாக்கோ தமிழ்ச் சங்கம் மூலமாக ப்ரஷர் கொடுத்திருக்கிறோம்... கதிர்வாணனின் அமைச்சரவையின் இரண்டாம் நிலை அமைச்சர்கள் அரசாங்க மட்டத்தில் தொடர்பு கொண்டு டாக்டர் ஜேக்ஸனை வர வழைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்...''

சரண் விளக்கிக் கொண்டிருந்தபோது - இண்ட்டர்காம் அழைத்தது.

ரிசிவரை எடுத்து நர்ஸ் ஒருத்தி - எடுத்த வேகத்திலேயே சீஃப் டாக்டர் சரணிடம் நீட்டினாள்.

''டாக்டர்... ஃபோன் உங்களுக்குத்தான்...''

சரண் ரிசிவரைக் கையில் வாங்கிக் காதில் உரசவிட்டார். டெலிபோன் ஆபரேட்டர் பெண்ணின் குரல் காதில் ஒலித்தது.

''உங்களைக் கேட்டு ஒருத்தர் ஃபோன் பண்ணியிருக்கார் டாக்டர் கனெக்ட் பண்ணவா?''

''அவர் பேர் என்ன...?''

"பேரைச் சொல்ல மறுத்துட்டார்... உங்க கிட்டே முக்கியமான விஷயம் பேசணும்ன்னு சொன்னார்..."

"என்ன விஷயம்ன்னு கேட்டியா...?"

"எதைப் பத்திப் பேசணும்ன்னு கேட்டேன்... இங்கே ஸ்பெஷல் வார்டில் அட்மிட் ஆகியிருக்கிற முதல் அமைச்சர் கதிர்வாணனைப் பத்திப் பேசணும்ன்னு சொன்னார்..."

நெற்றி பூராவும் வரிகள் விழத் தலையை அசைத்தார்.

"கனெக்ட் பண்ணு..."

சில விநாடி எலக்ட்ரானிக் இசைக்குப் பின் லைன் கனெக்ட் செய்யப்பட்டது.

"ஹலோ..." என்றார் சரண்.


"சீஃப் டாக்டர் சரணா...?"

"எஸ்... மே ஐ நோ ஹூ ஈஸ் ஸ்பீக்கிங்...?"

"ஸாரி டாக்டர்... நான் என் பேரைச் சொல்றதுக்கில்லை... ஆனா மேட்டரை மட்டும் சொல்லிடறேன்... சி.எம். கதிர்வாணனைக் காப்பாத்த பகீரதப் பிரயத்தனம் பண்ணிட்டிருக் கிங்க போலிருக்கு. ஐயாம் வெரி ஸாரி... அவரை உங்களால காப்பாத்த முடியாது... அவரோட சகாப்தம் முடிஞ்சது... தொடர்ந்து அவரே ஆட்சிக் கட்டிலில் உக்காந்திருந்தா எப்படி...? மத்தவங் களுக்கெல்லாம் அந்த வாய்ப்புக் கிடைக்க வேண்டாமா...? அதனால அவர் இனி மரணக் கட்டிலில் உறங்கட்டும்... இத்தோட அவர் சாகணும்... அதான் எங்க நேயர் விருப்பம்... அதை மீறி அவரோட உயிரைக் காப்பாத்த முயற்சிகள் நடந்தா... அப்படிப்பட்ட முயற்சிகள் எது வானாலும் அதை நாங்க முறியடிப்போம்..."

இறுக்கமான குரலில் சொல்லி விட்டுத் தொடர்பை அவன் அறுத்துக் கொள்ள கலவரத்தைப் பூசிக்கொண்ட முகத்தோட நிமிர்ந்தார் சீஃப் டாக்டர் சரண்.





# 5

டாக்டர் ஜேக்ஸன் எமிக்ரேஷன் செக்கிங்கை முடித்துக் கொண்டு - உள்ளே இருந்த ஏர்போர்ட் ஆபீசரின் அறைக்குள் நுழைந்தார்.

"எக்ஸ்க்யூஸ்மி... உங்களை நான் தொந்தரவு செய்கிறேனா...?"

வெள்ளைத் தாளில் ஏதோ குறிப்பு எடுத்துக் கொண்டிருந்த அந்தக் கெச்சலான ஆபீசர் நிமிர்ந்தார்.

"ஓ... ஜேக்ஸன்... கம் இன்..."

கழுத்து டையைத் தளர்த்திக் கொண்டே சீட்டில் பின்னுக்கு சாய்ந்து உட்கார்ந்தார்.

"எமிக்ரேஷன் முடிந்துவிட்டதா...?"

"முடிந்துவிட்டது... உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தேன்..."

ஜேக்ஸன் சொல்ல - அந்த ஆபீசர் புருவங்களை உயர்த்திக் கொண்டு கேட்டார்.

"எனக்கு எதற்கு நன்றி...?"

"ஃப்ளைட் டிக்கட் தாமதமின்றிக் கிடைக்கச் செய்ததற்காக நன்றி..."

"விலை மதிப்பில்லாத உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த உதவியைச் செய்ய வேண்டியது என்னுடைய கடமை..."

"இப்போதும் நான் ஒரு சர்ஜரிக்காகத்தான் இந்தியா சென்று கொண்டிருக்கிறேன்... ஒரு விவிஐபிக்கு இன்னும் முப்பத்தாறு மணி நேரத்திற்குள் ஆப்ரேஷன் செய்ய வேண்டியுள்ளது..."

ஆபீசர் புன்னகைத்தார்.

''உங்களுடைய அரிய சேவைக்கு மனித குலம் சார்பாக நான்தான் நன்றி சொல்ல வேண்டும்..ஹேப்பி ஜர்னி...கேரி ஆன் டாக்டர்...''

மீண்டும் ஒருமுறை அவருக்கு நன்றி சொல்லிவிட்டு மற்ற பயணிகளோடு வந்து காத்திருக்க ஆரம்பித்தார் ஜேக்ஸன்.

நிமிஷங்கள் நழுவிக் கொண்டிருக்க - விமானத்தில் ஏறுவதற்காக அறிவிப்பு கால தாமதமாகிக் கொண்டிருந்தது.

அதிகாரிகள் பரபரப்புடன் அங்குமிங்கும் அலைவது தெரிந்தது.

ஸ்பீக்கரில் ஓர் அறிவிப்பு மட்டும் வெளி யானது.

''போயிங் எய்ட் நாட் சிக்ஸ் ஒரு மணி நேரம் தாமதமாகப் புறப்படும்... இதனால் ஏற்படும் அசௌகரியத்தைப் பயணிகள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்...''

ஜேக்ஸன் பக்கத்திலிருந்தவரிடம் திரும்பி னார்.

''என்ன பிரச்னை...?''

''தெரியவில்லை... விமானத்தில் ஏதாவது கோளாறாக இருக்கலாம்...இப்போதெல்லாம் விமானப் பராமரிப்பிலும் சரி... சேவையிலும் சரி... அக்கறையின்மை நிலவுவதுபோல் தெரிகிறது...''

''ஒருவேளை வெதர் ப்ராப்ளமாகக் கூட இருக்கலாம் அல்லவா...?''

கண்ணாடிக்கு வெளியே தெரிந்த வானத்தைப் பார்த்தபடியே அவர் சொன்னார்.

''வெதர் கண்டிஷன் நன்றாகத்தான் இருக்கிறது...''

ஜேக்ஸன் சந்தித்துவிட்டு அந்த அதிகாரி அந்த நிமிஷம் குறுக்கே போக - அவரை நிறுத்திக் கேட்டார் ஜேக்ஸன்.

''என்ன பிரச்சினை...?''



''நீங்கள் பயணிக்க இருக்கும் விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகத் தகவல் வந்தது... பாம் ஸ்க்வாட் விமானத்தின் மூலை முடுக்குகளை எல்லாம் சோதனை போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.... அதனால்தான் தாமதம்...''

சொல்லிவிட்டு -

பரபரப்பு விலகாத நடையில் வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தார் அந்த அதிகாரி.

ஃப்ளைட் புறப்படும் நேரத்தைக் கடந்து நிமிஷங்கள் அழிந்து கொண்டிருந்தன.

தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் ஜேக்ஸனைப் பரபரப்பில் தள்ளியது.

இருப்புக் கொள்ளாமல் தவிப்போடு அமர்ந்திருந்தார்.

அவரைத் தாமதப்படுத்துவதற்காகத்தான் அந்த வெடிகுண்டு மிரட்டல் என்பது அப்போது அவருக்குத் தெரியாது.



## 6

பிரதான சாலையை ஒட்டி அமைந்திருந்தது அந்த ஹவுசிங் காம்ப்ளக்ஸ்.

மூன்றாவது தளத்தில் இருந்த ஒரு ஃப்ளாட் சில அத்தியாயங்களுக்கு முன்னால் நாம் பார்த்த நந்தினி... சாந்தினி... யாமினியுடையது.

ஏ.ஆர்.ரகுமானின் 'தாளம்' சிடி ப்ளேயரில் இருந்து கசிந்து கொண்டிருந்தது.

அதைக் காதில் வாங்கிக் கொண்டே போர்டில் மாட்டியிருந்த கேன்வாசில் ஆயில் பெயிண்ட்டை லாவகமாய் தீற்றிக் கொண்டிருந் தாள் நந்தினி.

பிரபல கடை ஒன்றில் மாட்டியிருந்த அவளுடைய பெயிண்ட்டிங்கைப் பார்த்துவிட்டு

ஒரு வெளிநாட்டுக்காரர் அவளைத் தேடிப் பிடித்து கொடுத்துவிட்டுப் போன ஆர்டர்.

ஒவ்வொரு சதுர மில்லி மீட்டர் பரப்பையும் அக்கறையாகச் செதுக்கிக் கொண்டிருந்தாள்.

அடிட்டிவ் ஒன்று தீர்ந்து போயிருக்க - அதை எடுப்பதற்காக தாங்கு கட்டைகளைக் கையிடுக்கில் பொருத்தினாள்.

அடுத்த அறைக்கு வந்தவள் ஆச்சர்யத்தால் புருவங்களைச் சுருக்கினாள்.

அங்கே சாந்தினி பின்னிக் கொண்டிருந்த கூடைகள் போட்டது போட்டபடி கிடக்க - அகலமான கண்ணாடி ஜன்னலைத் திறந்து வைத்து ஜன்னலின் விளிம்பில் உட்கார்ந்திருந் தாள் அவள்.

நந்தினி கத்தினாள்.

''ஏய்... வேலையைப் பார்க்காம அங்கே என்ன பண்றே...?''

தன் கையிலிருந்த வஸ்துவை ஜன்னல் அருகே வைத்துவிட்டு சாந்தினி திரும்பினாள்.

''ரிலாக்ஸ் பண்றேன்...'' என்கிற மாதிரி கைகளால் அபிநயித்தாள்.

அவளுடைய சைகைகள் நந்தினிக்கு சட்டென்று புரிந்துவிடும். யாமினியிடம் பெரும் பாலும் தொடுகை மூலம்தான் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வாள் சாந்தினி.

''என்ன அது ஜன்னல் பக்கத்தில்...?''

கேட்டவளிடம் அதை எடுத்து நீட்டினாள் சாந்தினி.

கறுப்பான உடம்புடன் இருந்த அந்த வஸ்து ஒரு சக்தி வாய்ந்த பைனாகுலர்.

''ஏதுடி இது...?''

மீண்டும் அபிநயம்.

''க்ரௌண்ட் ஃப்ளோரில் இருக்கிற மாமியின் பையன் புதிதாய் வாங்கியிருக்கிறான்.



பார்த்துவிட்டுத் தருகிறேன் என்று இரவல் வாங்கி வந்திருக்கிறேன்.

மாடி ஜன்னல் அருகே பைனாகுலருடன் உட்கார்ந்தால் அது ஒரு சூப்பர் என்ட்டர் டெயின்மெண்ட்டாகத்தான் இருக்கிறது.''

நந்தினி அந்த பைனாகுலரை வாங்கிக் கண்களில் வைத்துக் கொண்டே ஜன்னலருகில் வந்தாள்.

அந்த பைனாகுலரில் ஜூம் லென்சை எப்படி அட்ஜஸ்ட் பண்ண வேண்டும் என்று சாந்தினி சொல்லிக் கொடுத்தாள்.

நந்தினியின் பைனாகுலர் பார்வை கீழே சென்றது.

டெலிபோன்பூத் தெரிந்தது.

அதனுள் அமர்ந்திருந்த யாமினி தெரிந்தாள்.

நந்தினி ஆச்சர்யம் ததும்பும் குரலை வெளியிட்டாள்.

''வாவ்... அவ்வளவு தூரத்தில் இருக்கிற டெலிபோன் பூத் பக்கத்தில் வந்துடுச்சே...''

''அதற்காகத்தான் பைனாகுலர் இருக்கிறது'' என்று சிரித்துக் கொண்டே அபிநயித்தாள் சாந்தினி.

''ஃபென்ட்டாஸ்ட்டிக். யாமினி போட்டிருக்கிற தோடு என்ன டிசைன்... அவள் கையில் போட்டிருக்கிற மோதிரத்தில் என்ன எழுத்து எழுதியிருக்கு... எல்லாமே துல்லியமாத் தெரியுது...''

''நீ பார்த்தது போதும்... இரவல் வாங்கினதைத் திருப்பிக் கொடுப்பதற்குள் நான் கொஞ்ச நேரம் என்ஜாய் பண்ண வேண்டும்... நீ போய் கேன்வாசில் பெயிண்ட் தீட்டுவதைக் கவனி...'' - என்று சொல்லாமல் சொல்லி அவளிடமிருந்து பைனாகுலரைப் பிடுங்கினாள் சாந்தினி.

"மாமி பையன்தானே... நான் இன்னொரு நாள் இரவல் வாங்கிக்கறேன்... அல்லது சொல்லி வெச்சி நாம ஒரு பைனாகுலர் புதுசா வாங்கிட்டாப்போச்சு..."

தோள்களைக் குலுக்கி விட்டுப் போனாள் நந்தினி.

சாந்தினி மீண்டும் பைனாகுலரைக் கண்களில் பொருத்தினாள்.

கீழே டெலிபோன் பூத் தெரிந்தது.

அதிலிருந்து ஒரு வாட்டசாட்டமான ஆசாமி தாடியைத் தடவிக் கொண்டே வெளியேறினான்.

எதிர்சாரியிலிருந்த பெரிய ஹோட்டலை நோக்கிப் போனான்.

அவனிடம் சுவாரஸ்யம் எதுவும் இல்லாததால் பைனாகுலரை அங்குமிங்கும் அலைய விட்டுத் தேடினாள்.

ஹோட்டல் வாசலில் இருந்த ஒரு வயதான தம்பதியினர் சாந்தினியின் கவனத்திற்கு வந்தார்கள்.

என்ன காரணத்திற்காகவோ அந்த மாம அந்த மாமியிடம் எரிந்து விழுவதையும் மூஞ்சியை அஷ்டகோணலாக்கிக் கொண் கோபிப்பதையும் கொஞ்ச நேரம் ரசித்து கொண்டிருந்தாள்.

அவர்கள் ஒரு ஆட்டோ பிடித்து நகர்ந்து வி - அடுத்த இலக்கைத் தேடினாள்.

கண்ணாடி வேய்ந்த ஹோட்டல் ஜன்னல்க அவளைக் கவர்ந்தது.

ஒரு ஹோட்டல் ரூமை வேடிக்கை பார்த்தா என்ன...?

அவளுடைய மாடிக்கு நேர் எதிரே இருந் ஜன்னல் செவ்வகத்திற்கு பைனாகுலரை ஜ செய்தாள் சாந்தினி.



மங்கலாய் இருந்த காட்சி லென்ஸ் தொலைவுகளை அட்ஜஸ்ட் பண்ணியதும் - கூர்மையாகத் தெரிந்தது.

காட்சி தெளிவானதுமே - அதிர்ந்தாள் சாந்தினி.

சற்று நேரத்திற்கு முன்னால் டெலிபோன் பூத்திலிருந்து சென்ற வாட்டசாட்டமான ஆள் அந்த அறைக்குள் இருந்தான்.

மிகவும் ஆவேசத்தோடு இயங்கிக் கொண்டிருந்தான்.


அங்கிருந்த ஒரு வெள்ளைக்காரரைப் படுக்கையில் தள்ளி - அழுத்தியிருந்தான்.

அவன் கையிலிருந்த நைலான் கயிறு - வெள்ளைக்காரரின் கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்தது.

அவர் விழி பிதுங்கினார்.

நாக்கு துடிதுடித்தபடி வெளியே தள்ளிக் கொண்டு வர - கைகளையும் கால்களையும் மரண வேகத்தில் உதறியவர் - கொஞ்சம் கொஞ்சமாய் அடங்க ஆரம்பித்தார்.

சொற்ப விநாடிகளில் முற்றிலுமாய் மூச்சடங்கிப் போனார்.



## 7

**சீ**ஃப் டாக்டர் சரணும், இன்ஸ்பெக்டர் ஆதியும் கட்டிலின் மேல் தாறுமாறாக விழுந்து கிடக்கும் ஜேக்ஸனைக் கவலையான பார்வையில் நனைத்தார்கள்.

சரண் சொன்னார்.

"இன்ஸ்பெக்டர்... கதிர்வாணனோட உயிரை உங்களால காப்பாத்தவே முடியாதுன்னு

அன்னிக்கு மிரட்டல் ஃபோன் வந்தவுடனே ஹாஸ்பிட்டல் பூராவும் செக்யூரிட்டியை பலப் படுத்தினீங்க... சிஎம் கதிர்வாணன் அறைக்கு பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செஞ்சிங்க... ஆனா அவரோட உயிரைக் காப்பாத்த விடாம தடுக்க இந்த மாதிரி ஒரு கோணத்தில் ஈடு படுவாங்கன்னு நாம கொஞ்சமும் நினைக் கலை..."

"டாக்டர் ஜேக்ஸன் வந்து சர்ஜரி பண்ணினால்தான் கதிர்வாணன் பிழைக்க முடியும்... டாக்டர் ஜேக்ஸனையை தீர்த்துக் கட்டிட்டா கதிர்வாணன் பிழைப்பதை தடுத்துடலாமேன்னு க்ளவரா கணக்குப் போட்டிருக்காங்க... நாம ஏமாந்துட்டோம்... இப்ப நீங்க என்ன செய்யப் போறீங்க சரண்...?"

"இன்னும் முப்பத்தாறு மணி நேரத்துக் குள்ளே சிஎம் கதிர்வாணனுக்கு கட்டாயமா சர்ஜரி பண்ணியே ஆகணும்... இல்லைன்னா ப்ரெயின் ஹேமர்ரேஜ் அதிகமாகி அவர் உயிரை விட்டுடுவார்... வேற யாராவது ஒரு சர்ஜனை மாற்று ஏற்பாடு பண்ணியே ஆகணும்..."

"மத்தவங்களால இந்த சர்ஜரியை வெற்றிகரமா நடத்த முடியுமா...?"

"அதுக்கு எந்த கியாரண்ட்டியும் தர முடியாது... வி ஷல் ட்ரை அவர் லெவல் பெஸ்ட்..."

"எனக்கு இந்த நிமிஷத்தில் இருந்தே தலைவலி ஆரம்பம் டாக்டர்... ஏன்னா இது மேலிடத்து அரசியல் விவகாரம்... சொல்லி வெச்ச ஒருத்தன் கண்ணாமூச்சி விளையாடி இருக்கான்... ஊசலாடிட்டிருக்கிறது முதலமைச்ச ரோட உயிர்... கட்சிக்காரங்களும்... என்னோட மேலதிகாரிகளும் என்னை வறுத்தெடுக்கப் போறாங்க... எப்படியாவது கொலையாளிகளை மடக்கிட்டா கொஞ்சம் தப்பிச்சிக்கலாம்..."



கவலையோடு சொல்லிக் கொண்டே டாக்டர் ஜேக்ஸனின் டெட் பாடியை ஒருமுறை சுற்றி வந்தார்.

டிரஸ்சிங் டேபிள் கண்ணாடியின் மேல் ஸ்கெட்சினால் கிறுக்கியிருந்தார்கள்.

'...கதிர்வாணனைக் காப்பாற்ற வந்த ஆபத்பாந்தவன் காலி. இனி கடவுளே வந்தாலும் கதிர்வாணனைக் காப்பாற்ற முடியாது...'

வராந்தாவில் நடுக்கத்தோடு உட்கார்ந் திருந்த நந்தினி... சாந்தினி... யாமினி... ஆகியோரிடம் ஆதியை அழைத்துப் போனார் ஒரு கான்ஸ்டபிள்.

"இவங்கதான் ஸார் முதல்ல இன்ஃபார்ம் பண்ணினாங்க..."

அவர்களை லேஸர் பார்வையால் ஆராய்ந்தார் ஆதி.

கான்ஸ்டபிள் தொடர்ந்தார்.

"இவங்கள்ல சாந்தினிங்கற இந்தப் பொண்ணு கொலையை நேரில் பார்த்திருக்கு... ஐ விட்னஸ் ஸார்..."

ஆதி சட்டென்று நிமிர்ந்தார்.

"கொலை ஹோட்டல் ரூமுக்குள் நடந் திருக்கு... எப்படி இந்தப் பொண்ணு கொலையை நேரில் பார்த்தது...?"

நந்தினி குறுக்கிட்டுச் சொன்னாள்.

"இந்த ஹோட்டல் ரூமுக்கு நேர் எதிரே இருப்பது எங்களோட ஃப்ளாட் இன்ஸ்பெக்டர்... இரவல் வாங்கின பைனாகுலரை வெச்சு வேடிக்கை பார்த்துட்டிருந்த சாந்தினி ஏதேச்சையா மர்டரைப் பார்த்துட்டா..."

"எத்தனை பேரும்மா...? ஒருத்தரா ரெண்டு பேரா...?"

சாந்தினியைப் பார்த்து அவர் கேட்க - அவள் நடுங்கும் ஒற்றை விரலை உயர்த்திக் காண்பித்தாள்.

''ஒரே ஒரு ஆளா...?''

''ஆம்'' என்பதுபோல் தலையை அசைத்தாள் சாந்தினி.

''ஆள் எப்படி இருந்தான்...''

அவள் கைகளை அசைத்து அபிநயிக்க முயல - ஆதி பரபரத்தார்.

''வாயைத் திறந்து சொல்லும்மா...''

நந்தினி மீண்டும் குறுக்கிட்டாள்.

''அவளாலே பேச முடியாது இன்ஸ்பெக்டர்... அவ பிறவியிலேயே ஊமை...''

திகைத்துப்போய் அவளைப் பார்த்தவர் - நந்தினி யாமினி இருவரிடமும் திரும்பினார்.

''மை குட்னஸ்...உங்க ரெண்டு பேரில் யாரும் அந்த ஆளைப் பார்க்கலையா...?''

நந்தினி கறுப்புக் கண்ணாடியும்.. மிடி டீசர்ட்டும் அணிந்த யாமினியைக் காட்டினாள்.

''ஷி ஈஸ் யாமினி... இவளோட டெலிபோன் பூத்தில் இருந்து டாக்டர் கிட்டே போனில் பேசிட்டு அப்புறமாத்தான் அவன் ஹோட்டல் அறைக்குப் போயிருக்கான்... கொலை செஞ்சிருக்கான்...''

''அவன் எப்படி இருந்தான்னு உன்னால சொல்ல முடியுமாம்மா யாமினி...?''

யாமினி மெல்லிய குரலில் சொன்னாள்.

''ஸாரி இன்ஸ்பெக்டர்... எனக்கு கண்பார்வை சுத்தமாக் கிடையாது... டாக்ட ஜேக்ஸனோட டெலிபோனில் பேசின அந் ஆளோட குரலை மட்டும்தான் நான் கேட்டேன்...''

''என்னம்மா இது... கைக்கு எட்டினது வாய்க் எட்டலைங்கிற கதை மாதிரி சொல்றிங்க...''

ஆதி சலிப்பாய் அவர்களைப் பார்க்க யாமினி தொடர்ந்து சொன்னாள்.

''ஆனா ஒருத்தரோட குரலை ஒரு முறை கேட்டால் போதும்... நான் அவ்வளவு சுலபத்தி



மறக்கமாட்டேன்... எனக்கு அந்த ஆளோட குரல் ஞாபகம் இருக்கு இன்ஸ்பெக்டர்... இன்னொரு முறை கேட்டா நான் கரெக்ட்டா கண்டு பிடிச்சிடுவேன்...''

ஆதி சந்தேகத்தோடு அவளிடம் கேட்டார்.

''எத்தனையோ பேர் உன்னோட டெலி போன் பூத்துக்கு வர்றாங்க... போறாங்க... அத்தனை பேரோட குரலையும் உன்னால ஞாபகம் வெச்சிக்க முடியுமா என்ன...?''

''நீங்க தப்பா நினைச்சுக்கலைன்னா நான் உங்களை ஒரு கேள்வி கேக்கலாமா இன்ஸ் பெக்டர்...!''

''கேளும்மா...''

''எத்தனையோ பேரை நீங்க தினமும் பார்க்க வேண்டியிருக்கு... எல்லார் முகமுமம் பளிச்ன்னு உங்க நினைவில் இருக்குமா...?''

''சில முகங்கள் நினைவில் இருக்கும்...''

''முதல் அறிமுகமா இருந்தால் கூடவா...?''

''ஆமா...''

''எப்படி...?''

''அந்த ஆளோட முக்கியத்துவத்தைப் பொறுத்து நினைவில் இருக்கும்... கேசுக்குத் தேவையான ஆள்ன்னு மனசுக்குப் பட்டா முகம் நினைவில் பதிஞ்சிடும்...''

''அதே மாதிரித்தான் இன்ஸ்பெக்டர்... சில ரல்களை நான் ஞாபகத்தில் வெச்சிக்கும்படி ஆயிடும்... மறுபடியும் அந்த ஆள் வந்தா ண்டுபிடிக்கணும் இல்லையா...?''

''டாக்டர் ஜேக்ஸனுடன் உன்னோட பூத்தில் இருந்து போன் பேசின கொலைகாரனின் குரலை ஞாபகம் வெச்சிக்க வேண்டிய அவசியம் எப்படி ற்பட்டுச்சு...?''

''அவன் ஆள் சரியில்லைன்னு எனக்குத் தரிஞ்சது... அதனால அவன் குரலை ாபகத்தில் பதிய வெச்சிகிட்டேன்...''

''எதை வெச்சு அவன் ஆள் சரியில்லைன்னு முடிவு பண்ணினே...?''

''ஃபோன் பண்ணினதுக்கான காசைக் கொடுத்தவிதம்...''

''என்ன சொல்றே...?''

''என்னைப் பொறுத்த வரைக்கும் தொடு தலும்... ஓசைகளும்தான்... கண் பார்வைக்குச் சமம்... ஒருத்தர் தொடறதை வெச்சே அவரோட மனசை உணர முடியும்... வேணுமின்னே என் கையைத் தடவி காசைக் கொடுத்தான்... எனக்கு சரீன்னு கோபம் வந்தது.... அவன் குரலை ஞாபகம் வெச்சிகிட்டேன்... அடுத்த முறை அவன் வந்தா... காசை அங்கே வெச்சிட்டுப்போன்னு சொல்லிடலாமே... அந்த ஆள் ஒரு கொலை காரன்னு சாந்தினியும்... நந்தினியும் வந்து சொன்னப்ப எனக்கு அதிர்ச்சியாயிடுச்சு...''

இன்ஸ்பெக்டர் ஆதி கவலையும் குழப்பமுமாய் அவர்களைப் பார்த்தார்.

''ஐ விட்னஸா சாந்தினி இருக்கா... ஆனா அவளாலே பேச முடியாது... கொலைகாரனின் குரல் யாமினிக்குத் தெரியும்... ஆனா பேச முடிஞ்ச அவளாலே பார்க்க முடியாது... சே... என்ன ஒரு துரதிர்ஷ்டமான நிலைமை...''

நந்தினி வார்த்தைகளை வெளியிட்டாள்.

''இன்ஸ்பெக்டர்... நீங்க கவலைப்பட வேண்டாம்... சாந்தினியின் கை ஜாடைகளை என்னால ஓரளவுக்கு புரிஞ்சிக்க முடியும். தத்ரூபமா வரையக் கூடிய திறமை எனக்கு இருக்கு... அவ கிட்டே அடையாளங்களை வாங்கி நான் அந்த கொலைகாரனை படமா வரைஞ்சு கொடுக்க முயற்சி பண்றேன்... ஒரு வேளை அந்தப் படத்தில் இருக்கும் ஆசாமி கிடைச்சான்னா குரலை வெச்சு யாமினி அது அந்த ஆள்தானான்னு உறுதிப்படுத்திடுவா...''



நம்பிக்கை மெல்லிய கீற்றாகப் பரவ - நந்தினி... சாந்தினி... யாமினி... மூன்று பேரையும் பார்த்துத் தலையசைத்தார் ஆதி.



# 8

ஜீப்பை இயக்கிக் கொண்டே செல்போனில் சீஃப் டாக்டர் சரணோடு பேசினார் ஆதி.

''நான் இன்ஸ்பெக்டர் ஆதி பேசறேன்...''

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்...''

''ஆபீசர்ஸ் காலனிக்குள் வந்துட்டோம்... இங்கே டாக்டர் நவநீதத்தின் வீடு எங்கிருக்கு...? உங்களாலே லேண்ட் மார்க் சொல்ல முடியுமா...?''

''மெயின் ரோட்டிலா இருக்கிங்க...?''

''ஆமா...''

''நாலாவது வலது திருப்பம்... அந்த வீதியில் இடது பக்கம் பார்த்துட்டே போங்க... 'ரிஷபா' - ன்னு க்ரானைட்டில் செதுக்கின வீடு இருக்கும்... அதுதான் டாக்டர் நவநீதத்துடைய வீடு...''

''தாங்க்யூ சரண்...''

''வெல்கம்...''

''ஒரு நிமிஷம்... ரிசீவரை வெச்சிடாதிங்க...''

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்...''

''டாக்டர் ஜேக்ஸனுக்கு பதிலா நவநீத்தான் சர்ஜரி பண்ணப் போறாங்கற விஷயம் இந்த நிமிஷம் வரைக்கும் ஆஸ்பிட்டல்ல யாருக்கும் தெரியாதே...?''

''தெரியாது இன்ஸ்பெக்டர்...''

''அந்த விஷயத்தை ரகசியமாகவே வெச்சிருங்க... ஏன்னா... விஷயம் தெரிஞ்சா இவரோட உயிருக்கும் கொலையாளிகளால ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கு...''

''அந்த பயம் எனக்கும் இருக்கு இன்ஸ்பெக்டர்... அதனாலதான் நவநீத்துக்கு போலீஸ் ப்ரொட்டெக்ஷன் கேட்டேன்...''

''தாங்க்யூ... ஸீ யூ...'

போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டவர் - அவர் சொன்ன வழிகளில் ஜீப்பை செலுத்தினார்.

'ரிஷபா' என்ற க்ரானைட் செதுக்கலைக் கண்களால் துழாவிக் கொண்டே வந்தவர், அந்த வீடு கண்ணில் பட்டதும் இயக்கத்தை நிறுத்தினார்.

ஜீப்பில் வந்த கான்ஸ்டபிள்கள் ஷூக்கள் சப்திக்க - கீழே குதித்தார்கள்.

முகப்புக் கதவை நெருங்கி காலிங் பெல்லை அழுத்தினார்.

வீட்டுக்குள் மின்னலை சப்தம் கொட்டியது.

சொற்ப விநாடிகளுக்குப் பிறகு - கதவு திறக்கப்பட்டு ஒரு வேலைக்காரப் பெண் எட்டிப் பார்த்தாள்.

நிறையக் காக்கி உடைகளைப் பார்த்த திகைப்புடன் மிரட்சியான விழிகளோடு கேட்டாள்.

''யாரு வேணும்...?''

''டாக்டர் இருக்காரா...?''

''இருக்கார்...''

''இன்ஸ்பெக்டர் ஆதி வந்திருக்கார்ன்னு சொல்லும்மா...''

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - டாக்டர் நவநீத் வந்துவிட்டார்.

''ஹலோ டாக்டர்... ஐயாம் இன்ஸ்பெக்டர் ஆதி...''

''கிளாட் டு மீட் யூ...''

நவநீத் அவரிடம் கையைக் குலுக்கினார்.



''சீஃப் டாக்டர் சரண் சொன்னாரா...?''

''உள்ளே வாங்க...''

அவரை வரவேற்று முன்னறையில் அமர வைத்துவிட்டுச் சொன்னார் நவநீத்.

''டாக்டர் சரண் எல்லாமே விபரமா சொன்னார்... சிஎம் கதிர்வாணனுக்கு சர்ஜரி பண்றதுக்காக வந்த வெளிநாட்டு டாக்டர் ஜேக்ஸன் கொலை செய்யப்பட்டுட்டார்... அவருக்கு பதிலா அந்த சர்ஜரியை நான் செய்யணும்ன்னு கேட்டுகிடார்... அதுக்கு ஒத்துகிட்டதன் மூலமா என்னோட உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குன்னு எனக்குத் தெரியும்... ஆனா நான் அதைப்பத்தியெல்லாம் கவலைப் படப் போறதில்லை...''

ஆதி மெலிதாய்ப் புன்னகைத்தார்.

''நீங்க அதைப்பத்திக் கவலைப்படவே வேண்டாம்... அது எங்களோட கவலை... உங்களுக்கு ப்ரொட்டெக்ஷன் குடுக்கறதுக்காகத் தான் இப்போ நான் வந்திருக்கேன்...''

''டாக்டர் சரண் சொன்னார்...''

ஆதி டாக்டர் நவநீத்தைப் பாதுகாக்கும் பணிக்காக அழைத்துவரப்பட்ட செக்யூரிட்டி காப்ஸை அவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

''இவங்க ஒரு வளையம் மாதிரி நின்று உங்கக்குப் பாதுகாப்புக் கொடுப்பாங்க...டாக்டர் ஜேக்ஸனைக் கொலை செஞ்ச கொலை யாளியைப் பிடிக்கிற வரைக்கும் நீங்க எக்காரணத்தைக் கொண்டும் அந்த வளையத்தை உடைச்சிகிட்டு வெளியே போக வேண்டாம்...''

''எஸ் இன்ஸ்பெக்டர்...''

''பொதுவா உங்களுக்கு எந்த ஆபத்தும் இருக்காதுன்னு நினைக்கறேன்.. ஏன்னா நீங்கதான் கதிர்வாணனுக்கு சர்ஜரி பண்ணப் போறிங்கங்கற விஷயத்தை டாக்டர் சரண் இந்த நிமிஷம் வரை ரகசியமாவே வெச்சிருக்கார்...

விஷயம் பலருக்கும் தெரிஞ்சால்தானே அந்தத் தகவல் கொலையாளிக்கு எட்டி அவன் மூலமா உங்களுக்கு ஆபத்து ஏற்படும்..."

அந்த நிமிஷம் டெலிஃபோன் கொக்கரித்தது.

"ஹலோ... டாக்டர் நவநீத் ஹியர்..."

சொன்னவர் மறுமுனைக் குரலைக் காதில் வாங்கிவிட்டு - ரிசீவரை ஆதியிடம் நீட்டினார்.

"போன் உங்களுக்குத்தான் இன்ஸ்பெக்டர்."

"எனக்கா...? நான் இங்கே வந்திருக்கேன்னு டாக்டர் சரண் ஒருத்தருக்குத்தான் தெரியும்... அவரா போன் பண்ணி இருக்கார்...?"

"இல்லை இன்ஸ்பெக்டர்... வேற யாரோ பேசறாங்க..."

குழப்பத்தோடு ரிசீவரை வாங்கிக் காதில் ஒட்ட வைத்தார் ஆதி.

"ஹலோ... இன்ஸ்பெக்டர் ஆதி பேசறேன்..."

"என்ன... டாக்டர் நவநீத்துக்குப் பாதுகாப்புக் குடுக்கறிங்களா...? குடுங்க... குடுங்க... அதை உடைச்சிகிட்டு அவரைத் தீர்த்துக்கட்டிடுவோம்...கதிர்வாணனோட இஸட் செக்யூரிட்டியை உடைக்கிறதுதான் கஷ்டம்... இது ஒண்ணும் எங்களுக்குக் கஷ்டம் இல்லையே... மொத்தத்தில் கதிர்வாணன் இனி ஆட்சிக்கு வரமாட்டார்..."

"டேய்..."

"புரியுது... புரியுது... டாக்டர் நவநீத் கதிர்வாணனுக்கு ஆப்ரேஷன் பண்ணப் போறாங்கற விஷயத்தைப் பரம ரகசியமா வெச்சிருந்திங்க... அது எப்படி எங்களுக்குத் தெரிஞ்சதுன்னு யோசிக்கறிங்க... நாங்க உங்களை அல்லவா ஃபாலோ பண்றோம்...! டாக்டர் நவநீத்துக்கு நீங்க பாதுகாப்பு போட்டதுமே எங்களுக்குப் புரிஞ்சு போச்சு... அவர்தான் கதிர்வாணனுக்கு ஆப்ரேஷன் பண்ணப் போறார்ன்னு தெரிஞ்சிக்கிட்டோம்...டாக்டர் நவநீத்துக்கு நிறைவேறாத



ஆசைகள் ஏதாவது பாக்கி இருந்தா நிறை வேத்திக்கச் சொல்லுங்க... ஏன்னா எந்த நிமிஷத்தில் வேணா டாக்டர் நவநீத்தை அமரர் நவநீத்தா நாங்க மாத்திடுவோம்..."

"ஏய்... யாருடா நீ...?"


ஆவேசமாய் அவர் கேட்கக் கேட்க -

கடகடவென்று சிரித்தான் அவன்.

பிறகு -

டொக்.

மறு முனைக்காரன் தொடர்பைத் துண்டித்து விட - கோபத்திலும், பதட்டத்திலும் சிவந்து போன முகத்தோடு நிமிர்ந்தார் இன்ஸ்பெக்டர் ஆதி.



## 9

**மா**லைத் தினசரியை வாங்கிக் கையில் சுருட்டிக் கொண்டு ஆட்டோவில் ஏறினான் அவன்.

இடத்தைச் சொல்லிவிட்டு இருக்கையில் சாய்ந்து அமர்ந்தான்.

சொற்ப நிமிஷங்களுக்கு இரைச்சலான பயணம்.

"இங்கே எங்கே ஸார் போகணும்..."

அவன் குறிப்பிட்ட ஏரியா வந்ததும் - ஆட்டோ தயங்கி நிற்க -

"இப்படியே நிறுத்திக்கப்பா..."

அந்தத் தெருமுனையிலேயே இறங்கிக் கொண்டான் அவன்.

காசை வாங்கிக் கொண்டு ஒரு அரை வட்டம் போட்டு ட்ரப் ட்ரட்டென்ற ஓசையோடு ஆட்டோ

தேய்ந்து விட - வேக நடை இட்டு - தெருவின் கோடியில் இருந்த வீட்டைத் தொட்டான்.

காலிங் பெல்லுக்கு சப்தமிட ஆணை கொடுத்தான்.

'திறந்த கதவுக்குப் பின்னே இன்னொரு இளைஞன்.

உள்ளே நுழைகிற அவனைப் பார்த்துக் கேட்டான்.

''என்ன பாபு...பதட்டமா இருக்கே...?''

''என்னோட போட்டோ பேப்பர்ல வந்திருக்கு சிங்காரம்...''

பாபு சொல்ல - அந்த சிங்காரமும் லேசான அதிர்ச்சியைத் தொட்டான்.

''எப்படி...? எப்படி உன்னோட போட்டோ போலீசுக்குக் கிடைச்சது...? சின்னத் தடயத்தைக் கூட விட்டு வெக்காம சர்வ ஜாக்கிரதையா டாக்டர் ஜேக்ஸனைத் தீர்த்துக் கட்டியிருக்கோம்ன்னு நினைச்சிட்டிருக்கேன்...''

''அந்த நினைப்பில் மண் விழுந்துடுச்சு...''

''எப்படி...?''

''நான் டாக்டர். ஜேக்ஸனைக் கொலை செய்யறதை ஒரு பொண்ணு நேரில் பார்துட்டா...''

''மைகுட்னஸ்...யார் அவ...?''

''அந்த ஹோட்டலுக்கு நேர் எதிரே ஒரு அபார்ட்மெண்ட் இருக்கு... அங்கிருந்து பைனா குலர் வெச்சுப் பார்த்துட்டிருந்த ஒரு பொண்ணு கொலையை துல்லியமாப் பார்த்துட்டா...''

''சரி... உன்னோட போட்டோ எப்படி அவங்களுக்குக் கிடைச்சது...?''

''முழுசா சொல்றேன் கேளு... இந்த துரதிஷ்டத்திலும் ஒரு அதிர்ஷ்டம் என்னன்னா... கொலையை நேர்ல பார்த்த அந்தப் பொண்ணு ஒரு ஊமை... இந்த அதிர்ஷ்டத்திலும் ஒரு துரதிர்ஷ்டம் என்னன்னா... அவளோட சைகை



பாஷையை ஓரளவுக்குப் புரிஞ்சிக்கக்கூடிய இன்னொருத்தி அவளோட ரூம் மேட். அவ ஒரு ஆர்ட்டிஸ்ட்... தத்ரூபமா படம் வரையக் கூடியவள்... இவள் விளக்கிச் சொன்ன அடையாளங்களை வெச்சுப் பல படங்களை வரைஞ்சு தள்ளி... கடைசியில், அவங்க பார்த்த என்னோட உருவத்தைப் பிடிச்சிட்டாங்க... அந்த படம்தான் போட்டோ மாதிரி பேப்பர்ல வெளியிட்டிருக்காங்க... இந்தப் படத்தில் கண்ட நபரைக் காண்பவர்கள் உடனே போலீசுக்கு தகவல் தெரிவிக்கவும்ன்னு எல்லா பேப்பர்லயும் நியூஸ் தந்திருக்காங்க...''

சொல்லிக் கொண்டே பாவுவின் படம் வெளியாகியிருந்த பக்கத்தைப் புரட்டிக் காட்டினான்.

அதைப் பார்த்தவுடன் சிங்காரத்தின் உதடுகளில் புன்னகை பூத்தது.

''பாபு... இந்தப் படத்திலிருக்கிற ஆள் நீதான்னு சத்தியம் அடிச்சு சொன்னாலும் யாரும் நம்பமாட்டாங்க... ஏன்னா... டாக்டர் ஜேக்ஸனைக் கொலை செய்யறதுக்காக நீ மாறு வேஷத்தில் போயிருக்கே... மாறுவேஷத்திலிருந்த உன்னைத் தான் அந்த ஊமைப் பொண்ணு பார்த்திருக்கா... ஸோ அவ பார்த்த உருவத்தை தன் தோழியை வெச்சு வரைய வெச்சிருக்கா... அவ பார்த்த உருவத்துக்கும்... உன்னோட ஒரிஜினல் தோற்றத்துக்கும் சம்பந்தமே இல்லையே...''

''ஆமா... சம்பந்தம் இல்லைதான்... பேப்பரில் வந்திருக்கும் இந்தப் படத்தை வெச்சு அவ்வளவு சுலபத்தில் என்னை யாரும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதுதான்...''

''அப்படின்னா உன்னோட பதட்டம் தேவையில்லாதது...''

''இல்லை சிங்காரம்... என்னோட பதட்டத்தில் நியாயம் இருக்கு...''

''என்ன சொல்றே...?''

''மத்தவங்களால என்னைக் கண்டுபிடிக்க முடியலைன்னாலும் அந்த ஊமைப் பொண்ணு என்னை எங்காவது பார்த்தா கண்டுபிடிக்கறதுக் கான வாய்ப்பிருக்கு...''

''எப்படி...?''

''மாறு வேஷம் போட்டுகிட்ட நான் கண்ணாடி போட்டக்காம விட்டது என்னோட தப்பு... என்னோட கண்கள்... மூக்குக்கு மேல் இருக்கிற சின்னக் கரும்புள்ளி... இதையெல்லாம் பைனாகுலர் மூலமா துல்லியமா அவ பார்த்திருப்பா... நான் எந்தத் தோற்றத்தில் இருந்தாலும் இந்த இரண்டு அடையாளங்களும் அவளுக்குள்ளே சந்தேகத்தைத் தூண்டி விடறதுக்கான வாய்ப்புக்கள் அதிகம்...''

''அதனால...?''

''அவளை விட்டு வெக்கறது நமக்கு நல்லதில்லை...''

''பாபு...?''

''நம்மைக் காப்பாத்திக்கறதுக்காக நாம எத்தனை கொலை வேணா செய்யலாம்... அதான் என்னோட பாலிசி...''

''பாபு... அவள் உன்னை எங்கேயாவது எப்பவாவது நேரில் பார்த்தால்தானே அவ உன்னைக் காட்டிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும்...''

''நீ சொல்றது தப்பு... போலீஸ் ரெக்கார்ட்ஸ்ல என்னோட போட்டோ இருக்கு... பழைய க்ரிமினல்ஸோட ஆல்பத்தை அவ கிட்டே போலீஸ் காட்டினாங்கன்னா அதில் இருக்கும் என்னோட போட்டோவை அவ அடையாளம் கண்டுபிடிக்க நிறைய வாய்ப்பிருக்கு... அதுக்கு முன்னால அவளைத் தீர்த்துக் கட்டணும்...''



''நான் இதை யோசிக்கலை...''

''அவளை மட்டுமல்ல... அவளோட தங்கி யிருக்கும் இன்னொரு குருட்டுப் பொண்ணை யும் தீர்க்கணும்...''

''ஏன்...?''

''அவளுக்கு என்னோட குரல் மனசில் நல்லாப் பதிஞ்சுபோயிருக்காம்... மறுபடியும் எங்கே கேட்டாலும் உடனே அடையாளம் கண்டுபிடிச்சிடுவேன்னு போலீஸ் கிட்டே சொல்லியிருக்கா... அவளையும் விட்டு வெக்கலாமா...?''

சிங்காரம் தலையை ஆட்டியபடியே சொன்னான்.

''விட்டு வெக்கக் கூடாது...''

''அடுத்து நந்தினிங்கற கால் ஊனமான பொண்ணு...''

''அவ என்ன செஞ்சா...?''

''அவதானே என்னோட படத்தை வரைஞ்சு போலீஸ்கிட்டே கொடுத்திருக்கா... ஊமைப் பொண்ணு சாந்தினி சொன்ன அடையாளங்களை வெச்சு கிட்டத்தட்ட நூறு படங்களுக்கும் மேல வரைஞ்சு காட்டி கடைசியில் அவள் பார்த்த உருவத்தைக் கொண்டு வந்தாளாம்... இவ்வளவு படம் வரைஞ்சதில் என்னை நேரில் பார்த்த அனுபவம் அவளுக்கு ஏற்பட்டிருக்கும்... ஊமைப் பொண்ணால நமக்கு என்ன ஆபத்து இருக்கோ... அதே அளவு ஆபத்து இந்த கால் ஊனமான பொண்ணு நந்தினியாலும் ஏற்பட வாய்ப்பு இருக்கு...''


''அதனால அவளையும் தீர்த்துக் கட்டணும்...?''

''எஸ்....''

''அந்த மூணு பொண்ணுங்களையும் எப்படிக் கொல்லப் போறோம்...?''

''யோசிக்கலாம்... நல்லா யோசிச்சு... பக்கவா திட்டம் போட்டு போலீசில் மாட்டிக்காம இந்தக் கொலைகளை செய்யலாம்...''

இந்த வாக்கியத்தைச் சொல்கிற போதே பாபு தீவிரமான யோசனையில் மூழ்கிவிட்டான்.



## 10

அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரி நெல்ஸனை அந்த நள்ளிரவு டெலிஃபோன் கலைத்தது.

போர்வையை உதறிவிட்டு எழுந்து உட்கார்ந்தார். சுவரில் பொருத்தியிருந்த எலக்ட்ரானிக் டைம்பீஸைப் பார்த்தார். நேரம் 11.57.

'இந்நேரத்திற்கு யார் டெலிஃபோனில்...?'

யோசித்துக் கொண்டே ரிஸீவரை எடுத்து காது மடலோடு உரசி ''எஸ்'' என்றார்.

''மிஸ்டர். நெல்ஸன்...?''

''ஸ்பீக்கிங்...''

''உங்கள் தூக்கத்தைக் கெடுத்ததற்காக மன்னிக்க வேண்டும் நெல்ஸன்...''

''நீங்கள் யார்...?''

''டாக்டர் மோகன் ப்ரசாத். சென்னை ஜென்ரல் ஹாஸ்பிடல் டீன்...''

''என்ன விஷயம் டாக்டர்...?''

''நீங்கள் உடனே ஜி.ஹெச்சுக்கு வர வேண்டும்.''

''ஏதாவது அவசரமா...?''

''மிக மிக அவசரம்...''

''விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ளலாமா? இல்லாவிட்டால் ஹாஸ்பிடல்



வந்து சேர்வதற்குள் எனக்கு பி.பி.ஏறிவிடும். விஷயத்தைக் கோடிட்டு சொன்னால் போதும்.''

''சிகாக்கோவிலிருந்து சென்னைக்கு வந்த டாக்டர் ஜேக்சன் கொலை செய்யப்பட்டதில் இப்போது புதிதாய் ஒரு பிரச்னை முளைத் திருக்கிறது.''

''பிரச்னையா...?''

''எஸ்... அந்தப் பிரச்னையை உடனடியாய் வெளிச்சத்துக்கு கொண்டு வர முடியாது. அதுமட்டும் இல்லை; உங்கள் நாட்டின் அனுமதி இல்லாமல் அந்தப் பிரச்னையை நாங்கள் கையாளவும் முடியாது. நீங்கள் உடனே ஜி.ஹெச் வந்தால் இது பற்றி பேசிக் கொள்ளலாம்...''

''அரைமணி நேரத்திற்குள் வந்து விடுகிறேன்'' நெல்ஸன் ரிஸீவரை வைத்துவிட்டு பரபரப்போடு எழுந்தார். பக்கத்தில் படுத்து இருந்த அவருடைய மனைவி லாரா தூக்கக் கலக்கத்தில் புலம்பினாள்.

''டியர்...! எங்கே கிளம்பி விட்டீர்கள்...?''

''லாரா...! எழுந்து கதவைச் சாத்திக்கொள். டாக்டர் ஜேக்ஸன் கொலை சம்பந்தமாய் இப்போது ஏதோ ஒரு புதுப்பிரச்னை தோன்றியிருக்கிறதாம். சென்னை தலைமை டாக்டர் ஃபோன் செய்து அழைத்து இருக்கிறார்...''

லாரா கலவரமாய் எழுந்து உட்கார்ந்தாள். ''பொறுங்கள் டியர்... இந்த நள்ளிரவு டெலி போன்களை நம்ப முடியாது. ஃபோனில் பேசியது டாக்டர்தானா...?''

''டாக்டர்தான்...!''

''எதற்கும் செக்யூரிட்டியைக் கூட்டிக் கொண்டு போங்கள்...''

நெல்ஸன் தான் அணிந்திருந்த நைட் கவுனை உரிந்துவிட்டு வேறு உடைக்கு மாறி கார்ட்லஸ் ஃபோனில் வீட்டுக்கு வெளியே இருந்த செக்யூரிட்டிகளுக்கு தகவல் கொடுத்துவிட்டு

போர்டிகோவில் நின்றிருந்த தன் ஃபோர்டு கார்க்கு வந்தார்.

செக்யூரிட்டிகள் பின் தொடர கார் கிளம்பியது. நடுநிசிச் சென்னை சாலைகளை போக்குவரத்து இல்லாமல் சுத்தமாய் வைத்து இருக்க, நெல்ஸனின் கார் பதினைந்தே நிமிஷத்தில் ஜி.ஹெச்சைத் தொட்டு தலைமை டாக்டர் மோகன் பிரசாத் அறைக்கு முன்பாய் போய் நின்றது.

போலீஸ் கமிஷனரின் கார் மண்டையில் சுழலும் சிவப்பு விளக்கோடு ஒரு மரத்துக்குக் கீழ் நின்றிருக்க இரண்டு போலீஸ் ஜீப்கள் தள்ளி தள்ளி தெரிந்தன.

நெல்ஸன் காரை விட்டு இறங்க, இரண்டு டாக்டர்கள் எதிர்ப்பட்டு அவரைக் கூட்டிப் போனார்கள்.

டாக்டர் மோகன் பிரசாத்தின் அறை சில உயர் போலீஸ் அதிகாரிகளால் நிரம்பியிருந்தது. கமிஷனர் நாயக் நடுநாயகமாய் தெரிந்தார்.

டாக்டர் மோகன் பிரசாத் நெல்ஸனின் கையைப் பற்றி தளர்வாய் குலுக்கிவிட்டு நாற்காலியைக் காட்டினார்.

''உட்காருங்கள் மிஸ்டர் நெல்ஸன்.''

நெல்ஸன் உட்கார்ந்துகொண்டே போலீஸ் அதிகாரிகள் எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தபடி கேட்டார்.

''சிகாக்கோ டாக்டர் ஜேக்ஸனின் மரணத்தில் புதிதாய் இப்போது என்ன பிரச்னை...?''

மோகன் பிரசாத் மெல்லிய குரலில் ஆரம்பித்தார்.

''மிஸ்டர், நெல்ஸன்...! டாக்டர் ஜேக்ஸன் உங்கள் நாடு முழுவதும் அறிந்த புகழ்பெற்ற டாக்டர்தானே...?''

''ஆமாம்...''



''அவரோடு உங்களுக்கு பரிச்சயம் இருந்ததா...?''

''பெரிய அளவில் கிடையாது. இருந்தாலும் அமெரிக்காவில் நான் இருந்தபோது நான்கைந்து முறை சந்தித்து பேசியிருக்கிறேன்.''

''அவரைப் பற்றிய உங்கள் உண்மையான அபிப்பிராயம் என்ன...?''

''இப்போது எதற்காக இந்தக் கேள்வி...?''

''ப்ளீஸ்...உங்கள் பதிலைச் சொல்லுங்கள்.''

நெல்ஸன் நெற்றியைக் கீறிக் கொண்டே சொன்னார்.

''அவர் இந்த நூற்றாண்டின் ஒரு தலை சிறந்த அற்புதமான டாக்டர்.''

''அவர் ஒரு டாக்டர் என்பதை மறந்துவிட்டு சொல்லுங்கள்...''

''உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை.''

அதுவரை ஒன்றும் பேசாமல் இருந்த போலீஸ் கமிஷனர் நாயக் இப்போது குறுக்கிட்டுக் கேட்டார்.

''அவர் ஒரு நல்ல மனிதரா...?''

''ஏன் இப்படி கேட்கிறீர்கள்...? அவர் ஒரு சிறந்த டாக்டர் மட்டும் கிடையாது. பண்பான குணங்கள் கொண்ட நல்ல மனிதர்.''

''ஸாரி... மிஸ்டர் நெல்ஸன். அவர் ஒரு நல்ல மனிதராக இருக்க வாய்ப்பு மிகமிகக் குறைவு...''

''என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர் கமிஷனர்...?''

''டாக்டர் ஜேக்ஸன் ஒரு மோசடிப் பேர்வழி.''

நெல்ஸனின் கண்களில் லேசாய் கோபம். ''எதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அந்த முடிவுக்கு வந்தீர்கள்...?''

''வாருங்கள் எங்களோடு...'' கமிஷனர் நாயக்கும் டாக்டர், மோகன் பிரசாத்தும் எழுந்தார்கள்.

''எங்கே...?''

"ப்ளீஸ்...கம்.." டாக்டர் மோகன் பிரசாத்தும் கமிஷனர் நாயக்கும் திகைப்பில் விழுந்திருந்த நெல்ஸனைக் கூட்டிக் கொண்டு நடந்தார்கள்.

ஐந்து நிமிஷ மௌன நடைக்குப் பின் மார்ச்சுவரி வந்தது. கதவருகே செண்ட்ரிக்கு இருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் சல்யூட் அடித்து நிற்க, கமிஷனர் கண்ணைக் காட்டினார்.

ஒரு கான்ஸ்டபிள் கையில் இருந்த சாவிக் கொத்தை உபயோகப்படுத்தி மார்ச்சுவரியின் அறைக்கதவைத் திறந்து வைக்க மூவரும் உள்ளே போனார்கள்.

குளிர்சாதனம் செய்யப்பட்ட அறைக்குள் பிண நாற்றமும் பார்மல் - டி - ஹைலும் கலந்து சுவாசிக்கும் காற்றை அவஸ்தைப் படுத்தியது.

வெள்ளை விரிப்பில் உடல்கள் கட்டி வைத்த பொட்டலங்கள் மாதிரி தெரிய, மோகன் பிரசாத் தனியாய் ஒரு டேபிளின் மேல் கிடத்தப்பட்டிருந்த டாக்டர் ஜேக்ஸனின் உடலை நோக்கிப் போனார்.

வெள்ளை விரிப்பால் முழுதுமாய் போர்த்தப் பட்ட உடலுக்கு முன்பாய் போய் நின்ற மோகன் பிரசாத் நெல்சனை ஏறிட்டார்.

"மிஸ்டர் நெல்ஸன்! இப்படி வாருங்கள்! என் பக்கத்தில் வந்து நில்லுங்கள்..."

நெல்ஸன் உச்சபட்ச குழப்பத்தோடு மோகன்பிரசாத்துக்குப் பக்கத்தில் போய் நிற்க - அவர் வெள்ளை விரிப்பை அகற்றினார்.

எம்பாம் செய்யப்பட்ட ஜேக்ஸனின் உடல் பார்மலின் உதவியோடு கெடாமல் இருந்தது?

"மிஸ்டர் நெல்ஸன்! இந்த உடம்பை ஒரு நிமிஷ நேரத்துக்கு உற்றுப் பாருங்கள்..."

அவர் உற்றுப் பார்த்தார்.

ஒரு நிமிஷ நேரம் கரைந்ததும் மோகன் பிரசாத் கேட்டார்.

"ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா...?"



"இல்லை..."

"இது டாக்டர் ஜேக்ஸன்தானே?"

"ஆமாம்..."

"ஸாரி நெல்ஸன்... இது டாக்டர் ஜேக்ஸன கிடையாது. டாக்டர் ஜேக்ஸன் ஏதோ ஒரு காரணத்துக்காக உங்கள் நாட்டு மக்களை ஏமாற்றி வந்திருக்கிறார்..."

"எதை வைத்து அப்படி சொல்கிறீர்கள்...?"

"இதை வைத்து..." சொன்ன மோகன் பிரசாத் தன் கோட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து கிடுக்கி மாதிரியான அந்த ஃபோர்ஸிப்ஸை எடுத்து ஜேக்ஸனின் காதுக்குக் கீழே வைத்து இறுக்கிப் பிடித்து மேல் நோக்கி இழுத்தார்.

பாலிதீன் பேப்பர் மாதிரி எதுவோ பிய்த்துக் கொண்டு வந்தது.

தொடர்ந்து இழுக்க - சாக்ஸ் உறை போல் ஒரு ஜவ்வு படலம் உரிந்து கொண்டு வந்தது.

மோகன்பிரசாத் ஃபோர்ஸிப்ஸை பயன் படுத்தி அந்த ஜவ்வு படலத்தை இழுக்க -

உள்ளே

வேறு ஒரு முகம்.

நெல்ஸனின் நீல நிறக் கண்களில் பயம் ஒரு பெரிய வால் போஸ்டர் மாதிரி ஒட்டிக் கொண்டது.



## 11

**யா**ரோ தன்னைத் தொட்டு எழுப்புவதை உணர்ந்த நந்தினி தூக்கம் கெட்டுவிட்ட கோபத்தோடு கண் விழித்தாள். நள்ளிரவு இரண்டு மணி.

-எழுப்பியது யாமினிதான்.

''எ...ன்...ன...டி...?'' என்று சத்தம் போட்டு கேட்க முயன்றவளை சட்டென்று தன் கையால் பொத்தினாள். குரலை வெகுவாய் தாழ்த்திக் கொண்டு கிசுகிசுத்தாள்.

''சத்தம் போடாதே...''

நந்தினி பயத்தோடு யாமினியைப் பார்த்தாள்.

''ஏண்டி...''

''ஏதோ சத்தம் கேட்ட மாதிரி இருந்தது.''

''என்ன சத்தம்.''

''யாரோ ரெண்டு ஆம்பளைங்க பேசிக்கிற மாதிரி சத்தம்.''

''நம்ம ப்ளாட்டுக்குள்ளேயா?''

''ஆமா...! பார்...பார்... இப்பக்கூட ஏதோ சத்தம் கேட்டுது...''

நந்தினி காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்துப் பார்த்தாள்.

நிசப்தம்.

''எந்த சத்தமும் கேட்கலையே...?''

''உனக்கு எதுவும் கேட்காது. சாந்தினியை எழுப்பு சொல்றேன்.''

''என்ன யாமினி... நீ... நட்ட நடு ராத்திரியில் இப்படி எழுப்பி உட்கார வெச்சுகிட்டு அழிச் சாட்டியம் பண்றே...? எந்த சத்தமும் கேட்கலை... நீ படுத்துத் தூங்கு...''

''இல்ல... நந்தினி...! எனக்கு பார்வை இல்லாததினால மத்த சென்ஸ் அதிகம்.''

யாமினி சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த சத்தம் கேட்டது.

''க்க்க்ர்ர்ர்ர்...''

ஏதோ அறுபடும் சத்தம்.

நந்தினியின் விழிகள் அப்படியே நிலைத்தன. குரலை வெகுவாய் தாழ்த்திக் கொண்டு சொன்னாள்.



''யாமினி! நீ சொல்றது சரிதான். யாரோ எதையோ அறுக்கிற சத்தம் கேட்குது.''

''மொதல்ல சாந்தினியை எழுப்பு...''

சாந்தினி பதட்டமாய் உசுப்பப்பட்டாள்.

''ஏய் சாந்தினி... எந்திரி...''

அவள் மலங்க மலங்க விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். என்ன என்று அபிநயம் பிடித்துக் கேட்டாள்.

''சத்தத்தைக் கவனி...''

அவள் கவனித்துவிட்டு கண்களில் கலக்கத்தை நிரப்பிக் கொண்டாள்.

யாமினி குரலை வெகுவாய்த் தாழ்த்திக் கொண்டு கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்.

''இந்த க்க்க்ர்ர்ர்ர் சத்தம் நம்ம ஸ்டோர் ரூம் பக்கம் இருந்த வருதுன்னு நினைக்கிறேன்.''

''நந்தினி போய் பார்த்துட்டு வரட்டுமா?''

''இரு... நானும் உன்கூட வர்றேன்...'' யாமினி எழுந்தாள்.

நந்தினி கட்டிலுக்குக் கீழே குனிந்து தாங்குக் கட்டையை எடுக்க முயன்றாள்.

அது அங்கு இல்லாமல் போகவே 'எங்கே வைத்தோம்' என்று யோசித்த விநாடி -

பின்பக்கம் அந்த சிரிப்புச் சத்தம் கேட்டது.

''இனிமே ஸ்டோர் ரூமைப் பார்த்து என்ன பிரயோஜனம்? நான் உங்க வீட்டுக்குள்ளே வந்து ரெண்டு நிமிஷமாச்சு.''

மூன்று பேரும் அதிர்ந்து போயிருக்க அவன் பக்கத்தில் வந்து நந்தினியின் தோளைத் தட்டினான்.

''என்ன... வீடு பூட்டியிருக்கு...உள்ளே எப்படி வந்தேன்னு பார்க்கறீங்களா...? உனக்கு கால் கிடையாது. இவளுக்கு கண் கிடையாது. இவளுக்கு வாய் கிடையாது. இருந்தாலும் நீங்க

மூணு பேரும் சாமர்த்தியமா வாழ்க்கை நடத்தறது இல்லையா...? நீங்களே இவ்வளவு கெட்டிக் காரத்தனமா இருக்கும்போது எல்லா உறுப்பும் சரியா இருக்கிற எனக்கு எவ்வளவு சாமர்த்தியம் இருக்கும்...?''

நந்தினி சுவாசிக்கத் திணறிக் கொண்டு கேட்டாள்.

''உ...உ...உனக்கு என்ன வேணும்...? எதுக்காக இங்கே வந்திருக்கே...?''

''உங்க மூணு பேரோட உயிரும் வேணும். தர்றீங்களா...?''

அவன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்; முதுகுக்குப் பின்னால் கையைக் கொண்டு போய் சட்டையின் காலர் பகுதியிலிருந்து முக்கால் அடி நீளக் கத்தியை எடுத்தான்.

அது ஜீரோவாட்ஸ் வெளிச்சத்தில் குளித்து தன் உடம்பைப் பளபளப்பாய்க் காட்டியது.

நந்தினி கை கூப்பினாள்.

''எங்களை ஒண்ணும் பண்ணிடாதே... உனக்கு பணம் நகை வேணும்ன்னா அந்த இரும்பு பீரோவில் இருக்கு... எடுத்துக்கோ...''

''நான் திருட வந்தது பண்ம் நகையை கிடையாது. உங்க மூணு பேரோட உயிரை.''

''நா...நாங்க... என்ன தப்பு பண்ணினோம்?''

''உங்கள்ல ஒருத்தி கொலையைப் பார்த்தா, ஒருத்தி கொலையைச் செஞ்ச எங்க ஆளோட குரலைக் கேட்டா. இன்னொருத்தி படமாவே வரைஞ்சு கொடுத்திருக்கா. போலீஸுக்கு உதவி பண்ணி நீங்க மூணு பேரும் விருது வாங்கறதுக்கு முந்திநானே விருது கொடுக்கலாம்ன்னு வந்துட்டேன்.''

மூன்றுபேரும் உறைந்து போய் உட்கார்ந் திருக்க அவன் கத்தியோடு எழுந்தான்.



''உங்க மூணு பேரையும் நகை பணத்துக் காகத்தான் யாரோ கொலை பண்ணியிருக்காங் கன்னு போலீஸ் நினைக்கணும். அதுக்காகவாவது நான் பீரோவைத் திறந்தாகணும். பீரோ சாவி எங்கே...?''

அவன் கேட்க சாந்தினி பயந்து போய் சுவர் அலமாரியைக் காட்டினாள்.

சுவர் அலமாரியை நோக்கிப் போன அவன் பீரோ சாவியை எடுத்துக் கொண்டான்.

''பீரோவில எவ்வளவு பணம் இருக்கு...?''

''ப...ப...பத்தாயிரம்...''

''நகை...?''

''ஆறு வளையல் மட்டுந்தான் இருக்கு...''

''இதுக்கு இவ்வளவு பெரிய பீரோவா...?''

அவன் கிண்டலாய் கேட்டுக் கொண்டே சாவியை பீரோவுக்குக் கொடுத்து திருகி கைப்பிடியில் கை வைத்தான்.

அ...தி...ர்...ந்...தா...ன்.



## 12

**மா**ர்ச்சுவரியில் டாக்டர் ஜேக்ஸனின் இரண்டாவது முகத்தைப் பார்த்துவிட்டு பிரமை பிடித்துப் போய் நின்றிருந்த நெல்ஸன் போலீஸ் கமிஷனரிடம் திரும்பினார்.

''டாக்டர் ஜேக்ஸனிடம் இப்படி ஒரு விபரீதம் புதைந்து இருக்கும் என்று கொஞ்சம்கூட நான் நினைத்துப் பார்க்கவில்லை. எதற்காக இப்படி ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜரி முகம்...?''

கமிஷனர் நாயக் புன்னகைத்தார். ''நீங்கள் கேட்ட இந்தக் கேள்விக்கு விடை இந்தியாவில் கிடைக்காது மிஸ்டர் நெல்ஸன். சிகாக்கோவில்

தேடினால்தான் கிடைக்கும். டாக்டர் ஜேக்ஸனின் இந்த இரண்டு முக வாழ்க்கைக்குப் பின்னல் என்ன உண்மை ஒளிந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய பெரிய கடமை சிகாக்கோ போலீஸுக்கு இருக்கிறது. இதை முறைப்படி உங்கள் அரசாங்கத்துக்கு நீங்களே தெரியப்படுத்துவதுதான் சரியாக இருக்கும் என்ற எண்ணத்தில் இங்கே உங்களை வரவழைத் தோம்.''

நெல்ஸன் கேட்டார்.

''இந்த ந்யூஸை நீங்கள் ப்ரஸ்ஸுக்கு தெரியப்படுத்திவிட்டீர்களா?''

''இல்லை. இது உங்கள் நாடு சம்பந்தப்பட்ட பிரச்னை. தமிழ்நாட்டின் முதலமைச்சர் கதிர் வாணனைக் காப்பாற்றிவிடக் கூடாது என்பதற் காக முதலமைச்சர்க்கு வேண்டாதவர்கள் யாரோ டாக்டர் ஜேக்ஸனை கொலை செய்து இருக் கிறார்கள். அந்தக் கொலையாளிகள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதுதான் எங்கள் வேலை.''

''டாக்டர் ஜேக்ஸனின் உடலை எப்போது சிகாக்கோவுக்கு அனுப்பி வைக்கப் போகிறீர்கள்?''

''நாளை காலை பத்தரை மணி ஃப்ளைட்டில். சிகாக்கோ டாக்டர்ஸ் அஸோஷியேஷனைச் சேர்ந்த டாக்டர்கள் ஜேக்ஸனின் உடலைப் பெற்று இறுதிக் காரியங்களைச் செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார்கள். ஏனென்றால் ஜேக்ஸனுக்கு மனைவியோ குழந்தைகளோ கிடையாது. இப்போது எழுந்துள்ள பிரச்னையால் டாக்டர் ஜேக்ஸனின் உடலை உடனடியாக க்ரிமேஷம் செய்ய முடியாது. அங்குள்ள போலீஸ், ஜேக்ஸனின் உடலை மீண்டும் ஒரு தடவை போஸ்ட்மார்ட்டம் செய்து பார்க்க வேண்டும் என்று சொல்வார்கள்.''

நெல்ஸன் குறுக்கிட்டார். ''மிஸ்டர் நாயக்! இந்த விஷயத்தை நீங்கள் எப்படி பப்ளிக்கிற்கு



தெரியாமல் ஹேண்டில் செய்கிறீர்களோ அதையே தான் சிகாக்கோ போலீஸ் டிபார்ட்மெண்ட்டும் செய்வார்கள். டாக்டர் ஜேக்ஸன் எதற்காக - எப்போது இப்படி ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து முகத்தை மாற்றிக் கொண்டார் என்பதை அங்குள்ள போலீஸ் துறை இண்டலிஜென்ஸ் விங் கண்டுபிடித்துவிடுவார்கள்.''

கமிஷனர் நாயக் சொன்னார். ''அந்த உண்மை அங்கே கண்டுபிடிப்பதற்கு முன் பாகவே டாக்டர், ஜேக்ஸனைக் கொலை செய்த நபர் யார் என்பதை நாங்கள் இங்கே கண்டு பிடித்துவிடுவோம்.''

''கொலை செய்த நபர் யார் என்பதைக் கண்டுபிடிக்க என்ன முயற்சிகளை எடுத்து இருக்கிறீர்கள் மிஸ்டர் கமிஷனர்...?''

''கொலையாளி. யார் என்பது தெரிய வில்லை. ஆனால் அந்த கொலையாளியைப் பற்றி மூன்று பெண்களுக்கு தெரிந்து இருக்கிறது. அந்த மூன்று பெண்களுமே உடல் ஊனமுற்ற பெண்கள். ஒரு பெண் வாய் பேச முடியாத ஊமை. இன்னொரு பெண்ணுக்கு பார்வை கிடையாது. மூன்றாவது பெண்ணுக்கு கால் ஊனம். வாய் பேச இயலாத ஊமைப் பெண் சாந்தினி பைனாகுலர் வழியா கொலைகாரனைப் பார்த்து இருக்கா. ஐ விட்னஸ். அதேபோல் கொலையாளி டாக்டர் ஜேக்ஸனை கொலை செய்வதற்கு முன்பு கண் தெரியாத பெண் யாமினியின் எஸ்.டி.டி.பூத்துக்கு வந்து ஃபோன் செய்து பேசியிருக்கிறான். ஸோ கொலை யாளியின் குரல் இப்போது யாமினியின் மெமரியில் ரிஜிஸ்டராகியுள்ளது. மூன்றாவது பெண் கால் ஊனமான நந்தினி. அவள் ஒரு ஆர்ட்டிஸ்ட். கண்களில் பார்த்ததை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டு ஓவியம் தீட்டுவதில் எக்ஸ்பர்ட். ஊமைப்பெண் சாந்தினி தான் பைனாகுலர் வழியாகப் பார்த்த கொலை

யாளியைப் பற்றி சைகை மூலம் சொல்ல அவள் இந்த அடையாளங்களை வைத்துக் கொண்டு நான்கைந்து விதமாகக் கொலையாளியின் முகத்தை வரைந்து கொடுத்து இருக்கிறாள். அதை வைத்துக் கொண்டுதான் கொலையாளியைப் பிடிக்க முயற்சிகளை எடுத்து வருகிறோம்...''

கமிஷனர் நாயக் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒரு போலீஸ் அதிகாரி தயங்கி தயங்கி பக்கத்தில் வந்து நின்றார்.

''ஸார்...''

நாயக் தன் புருவங்களை உயர்த்தினார்.

''எஸ்...''

''கண்ட்ரோல் ரூமிலிருந்து ஒரு தகவல் ஸார்.''

''என்ன...?''

''அந்த மூணு ஹேண்டி கேப்ட் பெண்களை கொலை செய்யறதுக்காக ஒருத்தன் முயற்சி பண்ணி அவங்க குடியிருந்த ஃப்ளாட்டுக்குள்ளே நுழைஞ்சிருக்கான்.''

நாயக் பதட்டப்பட்டார்.

''ம்... சொல்லுங்க...! வாட் ஹேப்பண்ட்? அந்தப் பொண்ணுகளுக்கு எந்த ஆபத்தும் இல்லையே...?''

''எந்த ஆபத்தும் கிடையாது ஸார். அந்த பொண்ணுங்க மூணு பேரும் செஞ்சு வெச்சிருந்த ஒரு புத்திசாலித்தனமான காரியம் மூலமா உள்ளே வந்தவன் மாட்டிக்கிட்டான்.''

''இப்போ அவன் எங்கே...? ஸ்டேஷனுக்கு கொண்டு போயாச்சா...?''

''ஸ... ஸார்... அவன் வந்து இப்போ... ஹாஸ்பிடல்ல... இருக்கான்.''

''ஹாஸ்பிடல்...?''

''எஸ்... ஸார்...''




''ஏன்...?''

''அந்த மூணு ஹேண்டி கேப்ட் பெண்கள் திருடர்கள்கிட்ட இருந்து பணம் நகைக்ளைக் காப்பாத்திக்க ராத்திரி நேரங்கள்ல இரும்பு பீரோ கைப்பிடிக்கு கரண்ட் கனெக்ஷன் கொடுத்துடறது வழக்கமாம். உயிரைப் பறிக்கிற அளவுக்கு வோல்டேஜ் கிடையாது. கைப்பிடி மேல கையைவெச்சா ஆளைத் தூக்கி வீசிடும். அந்த மூணு பொண்ணுகளையும் தீர்த்துக்கட்ட வந்தவன் நடந்த கொலைகளுக்கு காரணம் திருட்டுதான்னு போலீஸை நம்ப வைக்கிறதுக்காக பீரோவைத் திறந்து நகைகளையும் பணத்தையும் எடுக்க முயற்சி பண்ணியிருக்கான். மின்சாரம் தாக்கி ஆள் தூக்கி வீசப்பட்டு கீழே விழ தலையில் நல்ல அடி. அன்கான்ஷியஸ் ஸ்டேஜுக்கு போயிட்ட அவனை ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருக்காங்க...''

''எந்த ஹாஸ்பிடல்...?''

''ஷண்முகா நர்ஸிங்ஹோம்.''



## 13

ஷண்முகா நர்ஹிங்ஹோம் அந்த நள்ளிரவு வேளையில் ட்யூப்லைட் வெளிச்ச சிதறலோடு நிசப்தமாய் தெரிய போர்டிகோவில் ஒரு போலீஸ் ஜீப் தெரிந்தது.

கமிஷனர் நாயக்கின் கார் சீறிக்கொண்டு வந்து ஜீப்புக்கு பின்புறம் வந்து நிற்க - காத்திருந்த இன்ஸ்பெக்டர் ஆதி வேகவேகமாய் ஓடி வந்து காரின் கதவைத் திறந்து வைத்துவிட்டு சல்யூட் அடித்து நகர்ந்தார்.

நாயக் காரினின்றும் இறங்கிக் கொண்டே கேட்டார்.

''ஆள் கான்ஷியஸுக்கு வந்துட்டானா?''

''இன்னும் இல்ல ஸார்... டாக்டர் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கார்.''

நாயக் போர்டிகோ படிகளில் ஏறினார்...

''டாக்டர் யாரு...?'

''நடராஜன் ஸார்.''

''தலையில் அடி பலமா...?''

''கொஞ்சம் பலம்தான் ஸார்...! மின்சாரம் தாக்கினதில் பின்னந்தலை சுவர்க்குப்போய் மோத ரத்த சேதத்தோடு கொஞ்சம் பெரிய காயம்.''

''உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?''

''இல்லை ஸார்...''

''அந்த மூணு ஹேண்டிகேப்ட் பெண்களும் இப்போ ஃப்ளாட்லதானே இருக்காங்க...?''

''ரெண்டு பேர் ஃப்ளாட்ல இருக்காங்க ஸார். ஒரு பொண்ணை மட்டும் ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு வந்தேன்.''

''எங்கே அந்த பொண்ணு...?''

''வாங்க ஸார்.'' இன்ஸ்பெக்டர் ஆதி ஐ.ஸி.யூனிட் இருந்த வார்டுக்கு கூட்டிக்கொண்டு போய் அங்கே வராந்தா நாற்காலியொன்றில் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்த நந்தினியைக் காட்டினார்.

''ஷி ஈஸ் நந்தினி ஸார்...''

தாங்கு கட்டைகளைப் பொருத்திக் கொண்டு எழ முயன்ற நந்தினியை கையமர்த்தினார் நாயக்.

''அப்படியே உட்காரம்மா...''

அவள் உட்கார்ந்தாள். காலியாய் இருந்த பக்கத்து நாற்காலியில் நாயக் உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

''என்ன நடந்தது... சொல்லும்மா...''

நந்தினி ஒரு ஐந்து நிமிஷம் செலவழித்து நடந்த சம்பவத்தை விவரித்து முடிக்க, நாயக் உன்னிப்பாய் செவிமடுத்துவிட்டு நிமிர்ந்தார்.



''டாக்டர் ஜேக்ஸனை கொலை பண்ணினது இந்த ஆள்தானா...?''

''இவன் கிடையாதுன்னு சாந்தினி சொன்னா ஸார். ஏன்னா பைனாகுலர் வழியா கொலையாளியைப் பார்த்தது சாந்தினிதான்.''

''பீரோவுக்கு கரண்ட் பாஸ் பண்ணி வெக்கிறது தப்பான காரியம் இல்லையா...? உங்கள்ல ஒருத்தர்கூட அதனால பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கே...?''

''இல்ல ஸார்... நாங்க அந்த விஷயத்தில் ரொம்பவும் எச்சரிக்கையாவே இருப்போம். ரெண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு திருடன் வந்து எங்க மூணு பேரையும் கத்திமுனையில் மிரட்டி பீரோவைத் திறந்து நாங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்சு வெச்சிருந்த பணம் நகை எல்லாத்தையும் கொண்டு போய்ட்டான். உடலளவில் ஊனமுற்ற எங்களால அவனை எதிர்த்து போராட முடியாத நிலைமை ஏற்பட்டது. மேற்கொண்டு நாங்க எதையும் இழக்க விரும்பாததால இப்படியொரு ஏற்பாட்டை பண்ணிகிட்டோம்... இந்த ஏற்பாட்டை நாங்க பண்ணாமே இருந்திருந்தா இன்னிக்கு நாங்க மூணுபேரும் அவன் கையாலே செத்து போயிருப்போம்.''

நந்தினி சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஐ.ஸி.யூனிட் கதவு திறக்கப்பட டாக்டர் நடராஜன் வெளியே வந்தார்.

கமிஷனர் எழுந்து போனார்.

''டாக்டர்... ஹௌ... ஈஸ்...ஹி...?''

''ஹி... ஈஸ் ஆல்ரைட்...! கான்ஷியஸ் வந்திருக்கு... நீங்க போய் பேசலாம்...''

''தேங்க்யூ டாக்டர்...''

நாயக்கும் இன்ஸ்பெக்டர் ஆதியும் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்கள்.

ஒரு நர்ஸ் ட்ரிப்ஸ் பாட்டிலை சரி பார்த்துக் கொண்டிருக்க தலையில் பாண்டேஜ் கட்டோடு அவன் பாதி கண்களை மலர்த்தியிருந்தான்.

ஆதி அவனுக்குப் பக்கத்தில் போய் நின்று கையைத் தொட்டு மெல்ல உசுப்ப அவன் விழிகளை இன்னமும் மலர்த்தியபடி திரும்பினான்.

பார்வை ஆதியின் மேல் நிலைத்தது.

''உம் பேர் என்ன...?''

''கா...கா...காசி ஸார்.''

''புனிதமான ஊர் பேரை வெச்சுகிட்டு மூணு பொண்ணுகளை கொலை பண்ண வந்தியா...?''

அவன் மௌனம் சாதிக்க, ஆதி கேட்டார்.

''டாக்டர் ஜேக்ஸனை எதுக்காக கொலை பண்ணினே?''

அவன் விழிகளில் திகைத்தான்.

''டா...டாக்டர் ஜேக்ஸனா...?''

''ம்...சிகாக்கோ டாக்டர்... அவரை ஹோட்டல் ரூம்ல வெச்சு கொலை பண்ணினது நீதானே...?''

அவன் தவிப்பாய் எழ முயன்றான். ''அது... அது... யார்ன்னே எனக்குத் தெரியாது ஸார்...''

''தெரியாதா...? இதோ பார்... பொய் சொல்லிட்டிருக்க இது நேரம் கிடையாது. அந்த மூணு பொண்ணுகளையும் கொலை பண்றது தானே உன்னோட நோக்கம்...''

''....''

''சொல்லு...''

''ஆ...ஆமா... ஸார்.''

''எதுக்காக அவங்களைக் கொலை பண்ண வந்தே...?''

''காரணமெல்லாம் எனக்குத் தெரியாது ஸார். நான் ஒரு கூலிப்படை ஆசாமி... டெலிஃபோன் மூலமா தகவல் வரும். ஒரு இருட்டான இடத்துல



பணம் கைமாறும். அவங்க யாரைச் சொல்றாங்களோ அந்த பார்ட்டியை இந்த உலகத்தில் இருந்தே அனுப்ப வேண்டியது என்னோட வேலை...''

இன்ஸ்பெக்டர் ஆதி, கமிஷனர் நாயக்கை ஏறிட்டார்.

''ஸார்... இப்படியெல்லாம் கேட்டா இவன் உண்மையைச் சொல்ல மாட்டான்.... இவனை...''


ஆதி சொல்லிக் கொண்டிருக்கும்போதே -

அந்த விபரீதம் நடந்தது.

அவனுக்கு வெகு பக்கத்தில் நின்று கொண்டிருந்த கமிஷனரின் இடுப்புப் பகுதிக்குள் தோல் பெல்ட்டுக்குள்ளிருந்து லேசாய் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ரிவால்வரை சட்டென்று உருவிக் கொண்டவன் எழுந்து உட்கார்ந்தான்.

திடுக்கிட்ட கமிஷனரும் ஆதியும் சட்டென்று பின்வாங்கி திகைக்க, அவன் மெல்ல புன்னகைத்தான்.

''இவ்வளவு... கேர்லஸ்ஸா இருக்கலாமா... கமிஷனர் ஸார்...? ஒரு கிரிமினலுக்குப் பக்கத்துல வரும்போது கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்க வேண்டாமா?''



## 14

**து**ப்பாக்கியை உயர்த்தி ஸ்லோமோஷனில் நாயக்கின் மார்பையும் ஆதியின் மார்பையும் மாறி மாறி குறிபார்த்தான் அவன்.

கமிஷனர் படபடத்தார்.

''போலீஸ்கிட்ட விளையாடாதே... துப்பாக்கியை குடுத்துடு...''

அவன் வாய்விட்டு சிரித்தான். ''என்ன ஸார் இது...? துப்பாக்கி என் கையில இருக்கு... நீங்க மிரட்டறீங்க...! இது என்ன ஸார் நியாயம்...?''

நாயக்கும் ஆதியும் அவனையே பார்த்துக் கொண்டு நிற்க அவன் தொடர்ந்தான்.

''பயப்படாதீங்க கமிஷனர் ஸார்! உங்களையோ இந்த இன்ஸ்பெக்டரையோ சுட்டுத் தள்ளிட்டு நான் தப்பிச்சு போயிடமாட்டேன். உங்களை எதுக்காக சுடணும்? உங்களுக்கும் எனக்கும் என்ன பகை...? ஒரு பகையும் கிடையாது. எத்தனையோ கொலைகளை பணத்துக்காக பண்ணியிருக்கேன். இது வரைக்கும் போலீஸ்ல ஒரு தடவை. கூட மாட்டினது கிடையாது. . நான் அடிக்கடி நினைச்சுகிற நினைப்பு என்ன தெரியுமா ஸார்? கடைசி வரைக்கும் போலீஸ் கையில் மாட்டிக்கக் கூடாது. அப்படி மாட்டிக்கிற சூழ்நிலை வந்தா உயிரோடு இருக்கக் கூடாது. ஏன்னா போலீஸ் கையில் மாட்டினா அந்த விநாடியிலிருந்து ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு நரகமாத்தான் இருக்கும்: கோர்ட்டுக்கு கொண்டு போறது, வர்றது, வழக்கு, விசாரணை, தீர்ப்புன்னு நாட்களை தள்ளிட்டப் போறதுல எனக்கு விருப்பம் இல்லை. எப்படியும் நான் பண்ணின் கொலைகளுக்காக எனக்கு தூக்கு தண்டனை தான் கிடைக்கப் போகுது. அந்த தண்டனையை ஒரு ஜட்ஜ் கொடுத்தா என்ன... நானே கொடுத்துக்கிட்டா என்ன...?''

அவன் சொல்லிக் கொண்டே -

தன் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியின் வாயை பதித்துக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் ஆதி பதட்டமாய் இரண்டடி முன்னால் ஓடி வந்தார்.

''நோ...!''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்...! நான் இன்னிக்கு இறக்க வேண்டிய நாள். எனக்கு சொந்தக்காரங்க



யாரும் கிடையாது. ஃப்ரண்ட்ஸும் கிடையாது. என்னோட பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ணி முடிச்ச பிறகு மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்ட்ஸுக்கு கொடுத்துருங்க. அவங்களுக்கு என்னோட உடம்பு ஒரு பாட புஸ்தகமாக இருக்கட்டும்.''

கமிஷனர் ஓர் அடி முன்னால் வந்தார்.

''இதோ பார்... நீ சாகக் கூடாது. உன்னால சில உண்மைகள் வெளியே வரவேண்டியிருக்கு. சிகாக்கோவிலிருந்து வந்த டாக்டர் ஜேக்ஸன் கொலை செய்யப்பட்டிருக்கார். முதலமைச்சர் கதிர்வாணனுக்கு ஆப்ரேஷன் செய்யறதுக்காக வந்தவர் அவசர அவசரமா கொலை செய்யப் பட்டிருக்கார். கொலையாளி யார்ன்னு தெரிஞ்ச அந்த உடல் ஊனமுற்ற மூணு பெண்களை கொலை பண்றதுக்காக நீ வந்திருக்கே. அவங்களைக் கொலை பண்ணச் சொன்னது யாருன்னு உனக்குத் தெரியுமா தெரியாதா?''

''தெரியும்...''

''சொல்லு... யார் அவங்க...?''

''வெரி ஸாரி கமிஷனர் ஸார்! நான் இதுவரைக்கும் பண்ணிட்டு வந்த தொழில் இல்லீகல்தான். இருந்தாலும் இதிலேயும் ஒரு தொழில் தர்மம் இருக்கு. நான் போலீஸ்ல மாட்டிக்கிட்டாலும் யாரையும் காட்டி கொடுக்கக் கூடாதுங்கறது என்னோட பாலிஸி. டாக்டர் ஜேக்ஸனை கொலை பண்ணினது யாரு... அதுக்குப் பின்னாடி இருக்கிறவங்க யாரு - இந்த கேள்விக்கெல்லாம் எனக்கு பதில் தெரியும். ஆனா சொல்ல மாட்டேன்.''

''உன்னோட முடிவு முட்டாள்தனமானது. பிஸ்டலை இப்படிக் கொடு...''

கமிஷனர் கத்திக் கொண்டே அவனை நோக்கி வர -


பிஸ்டலை தன் நெற்றியில் நன்றாகப் பதித்து வைத்துக் கொண்ட அவன் ட்ரிக்கரை சுண்டினான்.

"ட்ட்ட்டுமீல்..."

ரத்தம் எல்லாத்திசைகளிலும் சூடாய் சிதற - பிஸ்டலைப் பிடித்த கையோடு அப்படியே சரிந்தான் அவன்.

டாக்டர் நடராஜன் ஓடி வந்தார்.

"நர்ஸ்... ஸ்ட்ரெச்சரைக் கொண்டா..." பதட்டக் குரலில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனுடைய கண்கள் நிலைத்துப் போயின.



## 15

**கா**லை ஏழு மணி.

போர்வைக்குள் சுருண்டு கிடந்த பாபுவைத் தட்டி எழுப்பினான். சிங்காரம், கையில் சுடச்சுட 'தினத்தந்தி' பேப்பர்.

"பாபு... எந்திரி..."

பாபு பாதி கண்களைத் திறந்தான். ராத்திரி வயிறு முட்ட குடித்த ஸ்காட்ச் இரண்டு கண்களையும் ரத்தக் குளங்களாக்கியிருந்தது.

"என்ன சிங்காரம்... நல்ல தூக்கத்தைக் கெடுத்துட்டியே...?"

"தூக்கம் கெட்டுப் போயிட்டதுன்னு நீ சொல்றே காரியமே கெட்டுப் போச்சுன்னு நான் கவலைப்பட்டுக்கிட்டு இருக்கேன்."

பாபு பதட்டமாய் எழுந்து உட்கார்ந்தான்.

"சிங்காரம்...! நீ என்ன சொல்றே?"

"அந்த மூணு பொண்ணுகளையும் தீர்த்துக் கட்ட காசியை ஏற்பாடு பண்ணி நேத்தைக்கு ராத்திரி அனுப்பினோம் இல்லையா...?"



"ஆமா..."

"அவன் போலீஸ்ல மாட்டிக்கிட்டான்."

"அய்யய்யோ... அப்புறம்...?"

"பயப்படாதே...! யாரையும் காட்டிக் கொடுக்காமே கமிஷனரோட துப்பாக்கியை எடுத்து தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போய்ட்டான்."

பாபுவின் தூக்கக் கலக்கம் காணாமல் போக கவலைப்பட்டான். "காசி காரியத்தை கச்சிதமா பண்ணக் கூடியவனாச்சே... எப்படி கோட்டை விட்டான்?"

"எப்படியோ ஏமாந்து போய்ட்டான். பேப்பரைப் பாரு... காசி செத்துக்கிடக்கிற கோலத்தைப் பார்க்க பார்க்க வயித்தை பத்திகிட்டு எரியுது..."

பாபு பேப்பர் வாங்கிப் பார்த்தான். முதல் பக்கத்திலேயே கீழே கொட்டை எழுத்துகளில் செய்தி அப்பியிருந்தது.

**பல கொலைகளைச் செய்த**
**கூலிப்படை**
**காசி துப்பாக்கியால் சுட்டுத்**
**தற்கொலை!**
**போலீஸ் கமிஷனர்க்கு முன்பாக**
**நடந்த கோரம்.**

செய்திக்குப் பக்கத்திலேயே தலையில் குண்டு பாய்ந்து கோரமாய் செத்துக்கிடந்த காசியின் போட்டோ தெரிந்தது.

பாபு கவலையான குரலில் கேட்டான்.

"இனிமே என்ன பண்றது சிங்காரம்...! அந்த பொண்ணுகளை தீர்த்துக்கட்டற முயற்சியை விட்டுடலாமா...?"

''என்னது! முயற்சியை விடறதா...? இனிமேத்தான் நாம தீவிரமா காரியத்துல இறங்கணும்.''

''எப்படி...?''

''மூணு பேரையும் ஒண்ணா தீர்த்துக் கட்டறதை விட ஒவ்வொருத்தியையும் தனித் தனியா தீர்த்துக் கட்டறது ரொம்பவும் சுலபம்.''

''திட்டம் ஏதாவது கைவசம் இருக்கா?''

''இருக்கு...''

''சொல்லு...''

''மொதல்ல அந்த கண்ணில்லாத பொண்ணு யாமினியை எஸ்.டி.டி.பூத்தியே வெச்சு தீர்த்துடலாம்.''

''எப்படி...?''

''பூத்துக்குள்ளே போன் பேசற மாதிரி போய் டைம்பாம் செட் பண்ணின பையை வெச்சுட்டு வந்துட வேண்டியது.''

பாபு தன் ரோம மோவாயைத் தடவியபடி யோசித்தான்.

''என்ன யோசிக்கிறே...?''

''இது சரியா ஒர்க்அவுட் ஆகுமா?''

''ஏன் அப்படி கேட்கிறே...?''

''டைம்பாமை செட் பண்ணி வெளியே கொண்டு போறது அவ்வளவு சுலபம் கிடையாது. போலீஸ் செக்கிங் இப்பெல்லாம் அதிகம்.''

''பாபு! அதையெல்லாம் பார்த்துட்டிருந்தா முடியுமா? துணிஞ்சு இறங்க வேண்டியதுதான்...''

''சரி... எப்ப இந்த காரியத்தை பண்ணப் போறோம்...?''

''நாளை கழிச்சு மறுநாள்...''

''டைனமைட்டைக் கொணடு போறது யார்...? நீயா நானா...?''



''நான்தான். டெலிஃபோன் பேசற மாதிரி போய் உள்ளே யார் பார்வைக்கும் படாதபடி வெச்சுட்டு வந்துடப் போறேன். நீ போனா உன்னோட குரலே உன்னைக் காட்டிக் கொடுத்திடும்...''

''சிங்காரம்...! எதுக்கும் நல்லா யோசனை பண்ணிக்க. நீ போய் போலீஸ்ல மாட்டி கிட்டியானா எல்லா காரியமும் கெட்டுப் போயிடும்.''

''போலீஸைப் பத்தி நீ கவலைப்படாதே...! அவங்க கண்ல எப்படி மண்ணைத் தூவறதுங்கிற வித்தை எனக்குத் தெரியும்... அந்த ஊமைப் பொண்ணு சாந்தினி உன்னைத்தான் பார்த் திருக்கா... என்னைப் பார்க்கலை. அதே மாதிரிதான் கண்ணில்லாத அந்த யாமினி உன்னோட குரலைத்தான் கேட்டிருக்கா... என்னை அவங்கள்ல யாரும் பார்க்கவும் இல்லை. என்னோட குரலைக் கேட்கவும் இல்லை.''

''சரி... மொதல்ல யாமினியைத் தீர்த்துக் கட்டிடறோம், மத்த ரெண்டு பேரையும் எப்படி...?''

''மொதல்ல அவ கதையை முடிப்போம். அப்புறம் யோசிப்போம்...''

சிங்காரம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அறைக்குள் இருந்த ட்யூப்லைட் இரண்டு முறை எரிந்து எரிந்து அணைந்தது.

பாபுவும் சிங்காரமும் பதட்டமானார்கள்.

''பாபு! போய் கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போடு...''

பாபு வாசல் பக்கம் போக சிங்காரம் டாய்லட் அறைக்குள் நுழைந்தான். ஸிங்க்கோடு இணைக்கப்பட்ட ப்ளஷ் டார்ச்சைத் திறந்தான்.

உள்ளே -

சின்னதாய் ஒரு மினி வயர்லஸ் செட். சிவப்பு விளக்குக் கண்ணோடு மெல்லியதாய் முனகிக் கொண்டிருந்தது. மைக்ரோ ரிஸீவரை


எடுத்து காதுக்குப் பொருத்திக் கொண்டு மைக்ரோ போனில் பேச ஆரம்பித்தான்.

''ஹலோ...''

பாபு பக்கத்தில் வந்து நின்றபடி கேட்டான். ''என்ன சிங்காரம், கால் எங்கிருந்து...?''

''சிகாக்கோ...! லைன்ல காத்திருக்கச் சொல்லியிருக்காங்க...''

சிங்காரம் காத்திருக்க சில விநாடிகளுக்குப் பின் அமெரிக்க ஆங்கில உச்சரிப்போடு ஒரு குரல் வேகமாய் பேச ஆரம்பிக்க - சிங்காரமும் பதிலுக்கு அதே ஆங்கில உச்சரிப்போடு பேச ஆரம்பித்தான்.



## 16

முதலமைச்சர் கதிர்வாணன் ஏறக்குறைய ஒரு மரக்கட்டை மாதிரி கிடக்க, அந்த ஆபரேஷன் தியேட்டர் ஒரு இறுக்கமான சூழ்நிலையில் இருந்தது. இன்ஸ்பெக்டர் ஆதி மோவாயை தேய்த்தபடி இருக்க - தலைமை டாக்டர் சரண் டாக்டர் நவநீத்தை கவலையாய் ஏறிட்டார்.

''இந்த ஆப்ரேஷனை வெற்றிகரமாய் செய்து முடிக்க முடியுமா நவநீத்...?''

''சிரமமான ஆப்ரேஷன். ஒரு பால்பாய்ண்ட் பேனாவின் ரீஃபிள் தடிமனே இருக்க வேண்டிய ஒரு ரத்தநாளம் எலுமிச்சை அளவுக்கு புடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த புடைப்பினால் சுற்றிலும் உள்ள மூளை நரம்புகள் நசுக்கப்பட்டு எந்த நிமிஷமும் மரணம் நேரக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. ரிஸ்க் எடுத்துத்தான் ஆப்ரேஷன் செய்ய வேண்டியுள்ளது. இது மாதிரியான ஆப்ரேஷன்களையெல்லாம் டான்ஸில் ஆப் ரேஷன் மாதிரி வெற்றிகரமாக செய்து முடிப்பவர் டாக்டர் ஜேக்ஸன் ஒருவர் மட்டுமே...



துரதிர்ஷ்டவசமாய் அவர் இப்போது உயிரோடு இல்லை...''

இன்ஸ்பெக்டர் ஆதி சற்றே பதட்டத்தோடு கேட்டார்.

''டாக்டர்...! சி.எம்.முக்கு இந்த ஆப்ரேஷனை செய்யத் தயங்குகிறீர்களா...?''

''கொஞ்சம் தயக்கம்தான்...! காரணம் சி.எம்.முக்கு செய்யப் போகிற ஆப்ரேஷனின் சக்கஸ் ரேட் முப்பது பர்செண்ட்தான். இதற்கு முன் நான் செய்த இதே மாதிரியான இரண்டு ஆப்ரேஷன்கள் வெற்றி பெறவில்லை. அதுதான் தயக்கமாக இருக்கிறது...''

''டாக்டர்...! ஆப்ரேஷனில் ரிஸ்க்ஃபேக்டர் இருந்தாலும் இந்த ஆப்ரேஷனை, இப்போதுள்ள நிலையில் உங்களைத் தவிர வேறு யாரும் செய்ய முடியாது.''

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! நான் பயப்படுவது ஆப்ரேஷன் ஃபெய்வதற்காக அல்ல. அதற்குப் பிறகு நிகழப்போகும் விபரீதங்களுக்காக...''

''என்ன விபரீதம் நிகழும்...?''

''ஒரு வேளை ஆப்ரேஷன் பெய்லியராகி சி.எம் இறந்துவிட்டால் பப்ளிக் கோபத்தை சமாளிக்க போலீஸால் முடியாது. ஒரு வேளை இந்த ஆஸ்பத்திரியே சூறையாடப்படலாம்.''

''உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம் டாக்டர். நம்பிக்கையோடு ஆப்ரேஷனை செய்யுங்கள். எல்லாம் நல்லதாகவே நடக்கும்...''

''இட்ஸ்... ஓ.கே. காட் ஈஸ் க்ரேட்'' சொல்லிக் கொண்டே எழ முயன்றார் டாக்டர் நவநீத்.

அவருடைய ஓவர்கோட் பாக்கெட்டில் இருந்த செல்போன் சிணுங்கலாய் கூப்பிட்டது.

செல்போனை எடுத்து காதுக்கு கொடுப் பதற்கு முன்பு கூப்பிட்ட நெம்பர் எது என்று பார்த்தார்.

நம்பர் வரவில்லை.

'கம்பியில் இன்டர் கனெக்ட் செய்து பேசிக் கொண்டிருக்கலாம். நிச்சயமாய் இது ஒரு இல்லீகல் கால்.'

ஜாக்கிரதையாய் குரல் கொடுத்தார்.

"ஹலோ..."

"டாக்டர் நவநீத்..?"

"ஸ்பீக்கிங்..."

மறுமுனையில் குரல் சிரித்தது. கேலியான குரலில் கேட்டது.

"ஏன் இப்படி அடம் பிடிக்கறீங்க....?"

"நான் அடம் பிடிக்கறேனா...! எதுக்கு...?"

"சாகத்தான்..."

டாக்டர் நவநீத் வெலவெலத்துப் போனவராய் குரல் நடுங்கக் கேட்டார்.

"யா...யார்... நீ...?"

"என்னோட ஜாதகத்தை தனியா உங்களுக்கு கூரியர் தபாலில் அனுப்பி வைக்கிறேன். அப்ப என்னைப் பத்தி டீடெய்லா தெரிஞ்சுக்கலாம். இப்ப நான் சொல்லப் போறதை நீங்க கேட்கணும்..."

"என்ன சொல்லப் போறே...?"

"முதலமைச்சர் கதிர்வாண்னுக்கு நீங்க ஆப்ரேஷன் பண்ணக் கூடாது. அந்த ஆளை அப்படியே சாக விடணும்..."

"அது மட்டும் முடியாது. நான் ஒரு டாக்டர். அது யாராக இருந்தாலும் நான் என்னோட கடமையை பண்ணித்தான் தீரணும்..."

"ஸாரி... டாக்டர்... இந்த ஆப்ரேஷனை நீங்க பண்ணக் கூடாது. மீறி பண்ணினா நீங்க நிச்சயமா உயிரோடு இருக்க முடியாது. நீங்க மட்டும் இல்லை. உங்க ஃபேமிலி மெம்பர்ஸும் உயிரோடு இருக்கமாட்டாங்க. எங்க கோபம் அதோடு நின்னுடாது. ஹாஸ்பிடல் மேலேயும் திரும்பும். நீங்க சி.எம்.முக்கு ஆப்ரேஷன் பண்ணும்போது உங்களுக்கு உதவியா யார் யார் இருந்தாங்களோ அவங்க எல்லாரையும் லிஸ்ட் பண்ணி ஒவ்வொருத்தரையும் மேலே அனுப்பி வைப்போம்."

"வே...வேண்டாம்..."

"வேண்டாம்ன்னா... நீங்க ஆப்ரேஷன் பண்ணக் கூடாது. வீட்டுக்குப் போய் பொண்டாட்டியோடு சந்தோஷமா இருங்க! சி.எம்.மை சாக விடுங்க."

செல்ஃபோனில் பேச்சு நின்றது. டாக்டர் நவநீத் வியர்த்துப் போயிருந்தார்.

ஆதி கேட்டார்.

"என்ன டாக்டர்... மறுபடியும் போன்ல மிரட்டலா?"

"ம்...ம்..."

"அந்த மிரட்டலை குப்பையா நினைச்சு ஒதுக்கிட்டு ஆப்ரேஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகளை பண்ணுங்க டாக்டர்."

நவநீத் எழுந்தார். வியர்வையால் சொத சொத்துப்போன முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டே இரண்டடி எடுத்து வைத்தவர் ட்டென்று நின்றார்.

நடையில் சின்னதாய் ஒரு தடுமாற்றம். தலைமை டாக்டர் சரண் தாங்கிப் பிடித்தார்.

"நவநீத்... வாட் ஹேப்பண்ட்...?"

"லேசாக கிரிட்டினஸ்... பி.ப்பி. ஜாஸ்தியாகிருச்சுன்னு நினைக்கிறேன்."

"இப்படி உட்காருங்கள்."

நவநீத் ஒரு நாற்காலியில் உட்கார்த்தி வைக்கப்பட்டார். லேசாக மூச்சிரைத்தது. அதிகமாக வியர்த்தார்.

தலைமை டாக்டர் சரண் நவநீத்தை பரிசோத்து பி.ப்பீ பார்த்துவிட்டு ஒரு பெரு மூச்சோடு இன்ஸ்பெக்டர் ஆதியை ஏறிட்டார்.

''ஃபோன் மிரட்டலால் டாக்டர் நவநீத் சிறிது மிரண்டு போனதில் பி.பி.அதிகமாகிவிட்டது. இந்த நிலைமையில் இவரால் ஆப்ரேஷன் செய்ய முடியாது.''

''ஓய்வு எடுத்துக் கொண்டு பின் ஆப்ரேஷன் செய்யலாமே...?''

''ஸாரி மிஸ்டர் இன்ஸ்பெக்டர். மனதளவில் மிரண்டு போயிருக்கிற டாக்டர் நவநீத்தால் இனிமேல் திறமையாய் ஆப்ரேஷன் செய்ய முடியாது.''

சரண் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டாக்டர் நவநீத்துக்கு பி.ப்பீ. அதிகமாகி ஒரு பக்கமாய் சாய பரபரப்பு அங்கே பரவிக் கொண்டது.

''ஸ்ட்ரெச்சர்... ப்ளீஸ்...''

அடுத்த நிமிஷம் ஸ்ட்ரெச்சர் வேகமாய் உருண்டு வந்து பக்கத்தில் நின்றது.

நவநீத் ஸ்ட்ரெச்சரில் கிடத்தப்பட்டார்.



## 17

சிகாக்கோ.

மெர்லின் அவென்யூவின் இருதயப் பிரதேசத்தில் சி.பி.ஐ.யின் கட்டிடம் அந்த முற்பகல் வேளையில் பளபளத்துக் கொண்டிருக்க - டீப் ப்ளூ ஏஞ்சலோ கார் சத்தம் இல்லாமல் வந்து நின்றது.

நெல்ஸன் காரினின்றும் இறங்கி உள்ளே போக சி.பி.ஐ.அதிகாரி ஒருவர் பவ்யமாய் எதிர் கொண்டு கை குலுக்கினார்.



இருவரும் லிஃப்ட்டில் உயர்ந்து மேலே போனார்கள். நாற்பத்தியோராவது மாடியில் சி.பி.ஐ.டைரக்டர் ஸ்டூவர்ட் கிரானைட் வழுக்கை மண்டையுடன் - கவலையில் இறுகிப்போன முகத்துடன் காத்திருந்தார்.

பரஸ்பரம் இருவரும் கை குலுக்கிக் கொண்டு உட்கார்ந்தார்கள். சில விநாடி மௌனத்திற்கு பிறகு நெல்ஸன் கேட்டார்.

''மிஸ்டர். ஸ்டூவர்ட்! டாக்டர். ஜேக்ஸனின் ப்ளாஸ்டிக் சர்ஜரி விவகாரம் சம்பந்தமாய் ஏதாவது தகவல் கிடைத்ததா...?''

''ஒரு முக்கியமான விவரம் கிடைத்தது.''

''என்ன விபரம்?''

''டாக்டர் ஜேக்ஸன் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டுக்கு புறப்பட்டு போவதற்கு முன் சமூக விரோதிகள் சிலரால் கடத்தப்பட்டு இருக்க வேண்டும். அவரைக் கடத்திக் கொண்டு போனவர்கள் அவருடைய பாஸ்போர்ட்டை உபயோகப்படுத்தி அவருடைய முகத்தைப் போலவே ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு இந்தியாவுக்கு போயிருக்கிறார்கள். போன இடத்தில் உள்ளூர் பாலிடிக்ஸ் காரணங்களால் டாக்டர் ஜேக்ஸனை கொலை செய்து இருக்கிறார்கள்.''

''அதாவது உண்மையான டாக்டர் ஜேக்ஸன் என்று நினைத்து...?''

''ஆமாம்...''

''டாக்டர் ஜேக்ஸனைப் போலவே ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு இந்தியாவுக்கு போன நபர் யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டீர்களா...?''

''இன்னமும் இல்லை...! க்ரிமினல்களின் பழைய ரிக்கார்ட்ஸ்களை கம்ப்யூட்டர்க்கு கொடுத்து விபரம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.''

''டாக்டர் ஜேக்ஸனின் இந்தியப் பயண விஷயத்தில் ஒரு விஷயம் உங்களுக்கு நெருடலாகபடவில்லையா மிஸ்டர் ஸ்டூவர்ட்...?''

''என்ன நெருடல்...?''

''இந்தியாவில் இருக்கும் தமிழ்நாட்டு சீஃப் மினிஸ்டர் உயிர்க்கு ஆபத்தான நிலைமையில் ஹாஸ்பிடலில் அனுமதிக்கப்பட்ட உடனேயே இங்கே சிகாகோவில் இருக்கும் டாக்டர் ஜேக்ஸனுக்கு உடனடியாக இந்தியா புறப்பட்டு வரும்படி டெலிஃபோனிலும் ஃபேக்ஸிலும் தகவல் வந்தது இல்லையா...?''

''ஆமா...''

''டாக்டர் ஜேக்ஸனும் அந்த அழைப்பை ஏற்று உடனே புறப்பட்டார். அதாவது தகவல் கிடைத்த ஆறு மணி நேரத்துக்குள், இல்லையா மிஸ்டர் ஸ்டுவர்ட்...?''

''ஆமாம்...''

''அந்த ஆறு மணி நேர அவகாசத்துக்குள் ஒரு க்ரிமினல் பேர் வழி டாக்டர் ஜேக்ஸனைப் போலவே ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு இந்தியாவுக்கு போக சாத்தியம் உண்டா...?''

''நிச்சயமாய் சாத்தியம் கிடையாது.''

''இது குறித்து ப்ளாஸ்டிக் சர்ஜரி நிபுணர்களிடம் கேட்டீர்களா?''

''கேட்டேன்.''

''அவர்கள் பதில் என்ன?''

''ஒருவருடைய முகத்தைப் போலவே இன்னொருவரின் முகத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரியால் மாற்ற குறைந்தபட்சம் நான்கு மாத காலமாகும் என்பதே அவர்களின் தீர்க்கமான பதில்.''

''உண்மை விபரம் இப்படி இருக்கும்போது ஒரு க்ரிமினல் எப்படி ஆறு மணி நேர அவகாசத்துக்குள் டாக்டர் ஜேக்ஸனை கடத்திக் கொண்டு போய் வைத்துக் கொண்டு அவருடைய பாஸ்போர்ட்டை உபயோகித்து முகத்தை அவர் மாதிரியே ப்ளாஸ்டிக் சர்ஜரி



செய்து கொண்டு இந்தியா போயிருக்க முடியும்....? சரி... அப்படி போனவன் எந்த காரணத்துக்காக போயிருப்பான்...?''

ஸ்டுவர்ட் தோள்களைக் குலுக்கினார்.

''நாங்களும் அந்த பாயிண்டை யோசித்துப் பார்த்து களைத்துப் போய்விட்டோம். இந்தியா போய்ச் சேர்ந்து ஹோட்டலில் தங்கியிருந்த சிறிது நேரத்துக்குள்ளேயே டாக்டர் ஜேக்ஸனைப் போல் ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்ட நபர் கொலை செய்யப்பட்டிருக்கிறான். அந்த கொலை மட்டும் நடந்திருக்காவிட்டால் இப்படியொரு உண்மை வெளியே வந்திருக்காது.''

ஸ்டுவர்ட் பேசிக் கொண்டிருக்கும்போதே மேஜையின் மேல் பல நிறங்களில் இருந்த டெலிபோன்களில் ஒன்று மெலிதாய் முனகியது.

ஸ்டுவர்ட் எடுத்து செவிமடுத்துவிட்டு ''கொண்டு வாருங்கள்'' என்று சொல்லி ரிஸீவரை அமர்த்தினார். சின்ன மலர்ச்சியோடு நிமிர்ந்தார்.

''மிஸ்டர் நெல்ஸன்...! எஃப்.பி.ஐ.யிலிருந்த ஒரு தகவல் கிடைத்திருக்கிறது.''

''என்ன தகவல்...?''

''டாக்டர் ஜேக்ஸனைப் போலவே ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு இந்தியா போய் கொலையுண்ட நபர் யார் என்று தெரிந்துவிட்டதாம்...''

''இஸிட்...! யார்...?''

''இரண்டு நிமிஷத்தில் கம்ப்யூட்டர் ரிப்போர்ட் வந்துவிடும்.''

காத்திருந்தார்கள்.

கம்ப்யூட்டர் ரிப்போர்ட் வந்தது.

நெல்ஸன் ஆர்வமாய் வாங்கிப் பார்த்தார் ரிப்போர்ட்டின் மூலையில் ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒட்டப்பட்டு அதில் தாடி வைத்த ஒரு இளைஞனின் முகம்.

கீழே விபரங்கள்.

பெயர்: ப்ரெட்ரிக்

வயது: 31

செய்த குற்றங்கள்: ஒரு கொலை. இரண்டு கற்பழிப்பு. மற்றும் கடத்தல்.

தண்டனை: இதுவரையிலும் போலீஸ் பிடியில் மாட்டவில்லை.

சார்ந்துள்ள இயக்கம்: எது என்பது தீர்மானமாகத் தெரியவில்லை.

நெல்ஸன் கம்ப்யூட்டரில் இருந்த விபரங்களைப் படித்துவிட்டு குழப்ப முகமாய் நிமிர்ந்தார்.

''ஒரு கிரிமினல் பேர்வழி கொல்லப்பட்டதில் சந்தோஷம் கொள்ளும் அதே நேரத்தில் கடத்திக் கொண்டு போகப்பட்ட டாக்டர் ஜேக்ஸன் இப்போது உயிரோடு இருக்கிறாரா? இல்லையா என்பது கவலைக்குரிய விஷயம்... அவரைக் கண்டுபிடிக்க ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா...?''

''தீவிரமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் மிஸ்டர் நெல்ஸன். சி.பி.ஐ.அதிகாரிகளும் எஃப்.பி.ஐ.அதிகாரிகளும் இணைந்து சிகாக்கோ நகரம் முழுவதும் இன்வெஸ்டிகேஷன் நெட்டைப் பின்னிக் கொண்டு திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர் ஜேக்ஸன் ஒரு மருத்துவ மேதை. அவருடைய உயிர் விலை மதிப்பானது. எந்த ஒரு சிக்கலான கேஸையும் குணப்படுத்தி நோயாளியை சில ஆண்டுகள் வரைக்குமாவது உயிர் வாழ வைத்துவிடுபவர். அவர் உயிரோடு மீட்கப்படுவதற்காக அமெரிக்க போலீஸ் துறையும் உளவுத்துறையும் இந்த விவகாரத்துல களம் இறங்கியிருக்கு. தேவைப்பட்டால் இண்டர்போல் போலீஸ் உதவியையும் நாட சி.பி.ஐ. முடிவு எடுத்துள்ளது.''

நெல்ஸன் எழுந்தார்.

''ஓக்கே! மிஸடர் ஸ்டுவேர். நான் ஒரு வார காலம் சிகாக்கோவில் இருந்துவிட்டு எம்பஸி



பணிக்காக இந்தியா திரும்ப வேண்டும். அதற்குள் டாக்டர் ஜேக்ஸன் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.''

சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஃபேக்ஸ் கூப்பிட்டது. ஸ்டுவேர்ட் அறையின் மூலையில் இருந்த உதவியாளர்க்கு கண்ணைக் காட்ட அவர் வேகவேகமாய் போய் ஃபேக்ஸ் மெஷினிலிருந்து பிதுங்கி வெளிப்பட்ட பேப்பரை பறித்துக் கொண்டு வந்தார்.

ஸ்டுவேர்ட் வாங்கிப் படித்தார்.

**இது சிகாக்கோ போலீஸ் தலைமையகம்.**<br>**ஒரு வருத்தமான செய்தி**<br>**வெரோன் நதிக்கரையோரம் டாக்டர்**<br>**ஜேக்ஸனின் உடல் கண்டெடுக்கப்பட்டு**<br>**உள்ளது.**<br>**மேற்கொண்டு விசாரணையைத் துவக்க**<br>**ஸ்தலத்துக்கு வரவும்.**<br>**சிகாக்கோ நகர போலீஸ்**<br>**கமிஷனர் சார்பாக தகவல்**<br>**கொடுக்கப்பட்டுள்ளது.**

அதிர்ந்து போன ஸ்டுவேர்ட் அந்த ஃபேக்ஸ் செய்தியை நெல்ஸனுக்குக் காட்ட அதிர்ச்சி அவர் முகத்துக்கும் பரவியது.



## 18

சிங்காரத்தின் கையில் இருந்த அந்த டைம்பாமை கொஞ்சம் பயத்தோடு பார்த்தான் பாபு.

''ரொம்பவும் பவர்ஃபுல்லா இருக்கும் போலிருக்கே...?''

சிங்காரம் சிரித்தான் ''நம்ம விஷயங்கள் எல்லாமே பவர்ஃபுல்தான். யாமினியோட

எஸ்.டி.டி.பூத்தை மட்டும் இல்லை. பக்கத்தில் இருக்கிற ரெண்டு மூணு கடைகளையும் இந்த டைனமைட் செங்கல் செங்கல்லா உதிர வைக்கும். குருட்டு யாமினிக்கு கிடைச்ச முடிவைப் பார்த்து அந்த ஊமைப் பொண்ணும் நொண்டிப் பொண்ணும் நம்மைக் காட்டிக் கொடுக்கிற முயற்சியிலேயே இறங்கக் கூடாது.''

''டைனமைட்டை எத்தனை மணிக்கு செட் பண்ணியிருக்கே...?''

''பத்தரை மணிக்கு.''

''துல்லியமா வெடிக்குமா...? இல்லே சமயத்துல காலை வாரி விட்டுடுமா...?''

''உனக்கு அந்த கவலையே வேண்டாம் பாபு. இதை செட் பண்ணிக் கொடுத்தது சாதாரண நபர் கிடையாது. கோட்டயம் கோயா. ஒரு விநாடி தப்பாமே காரியத்தை செஞ்சு முடிக்கும்.''

''இப்ப மணி என்ன...?''

''பத்து. நான் கிளம்பறேன். இப்பவே ஸ்கூட்டர்ல கிளம்பினாத்தான் பத்தே காலுக்குள்ளே எஸ்.டி.டி.பூத்துக்கு போய்ச் சேர முடியும்'' சொன்ன சிங்காரம் டைம்பாமை ஒரு ப்ளாஸ்டிக் கேரி பேக்கில் போட்டு சுற்றி எடுத்துக் கொண்டான்.

''சிங்காரம்...! பத்திரம்.''

''என்னைப்பத்தி கவலைப்படாதே...! நீ வீட்டை விட்டு வெளியே வராமே ஜாக்கிரதையா வீட்டுக்குள்ளேயே இரு...நான் செட் பண்ணிட்டு உடனே வந்துடறேன்.''

கிளம்பினான் சிங்காரம்.

பத்தே நிமிஷத்தில் யாமினியின் எஸ்.டி.டி. பூத் பார்வைக்கு கிடைத்தது.

மஞ்சள் பெயிண்ட்டில் குளித்திருந்த எஸ்.டி.டி. பூத்துக்கு முன்னால் ஸ்கூட்டரை நிறுத்தினான்.



பூத்தில் யாரும் இல்லை. பக்கத்து மளிகைக் கடையில் மட்டும் பெண்களின் காலை நேரக் கூட்டம் தெரிந்தது. இடது பக்கம் இருந்த எலக்ட்ரிக் கடையில் இரண்டு பேர் அரசியல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சிங்காரம் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு டைம்பாம் கர்ப்பம் தாங்கியிருந்த கேரி பேக்கை காஷுவலாய் எடுத்தபடி பூத்துக்குள் நுழைந்தான்.

காலடி ஓசை கேட்டதுமே யாமினி மேஜை மேல் வைத்திருந்த ட்ரான்சிஸ்டரின் வால்யூமைக் குறைத்து விட்டு நிமிர்ந்தாள்.

சிங்காரம் சொன்னான்.

''ஒரு ஃபோன் பண்ணணும்.''

''லோக்கலா... எஸ்.டி.டி.யா?''

''லோக்கல்.''

''இந்த போன்ல பண்ணிக்குங்க...'' தனக்கு முன்னால் இருந்த இரண்டு டெலிஃபோன் இன்ஸ்ட்ருமெண்ட்களில் ஒன்றைத் தொட்டுக் காண்பித்து விட்டு தயக்கமாய் கேட்டாள்.

''சில்லறை ஒண்ணரை ரூபாய் இருக்கா?''

''இருக்கு...'' சொன்ன சிங்காரம் ஒரு கையால் ரிஸீவரை எடுத்துக் கொண்டே இன்னொரு கையால், தான் கொண்டு வந்திருந்த டைம் பாம் கேரி பேக்கை யார் பார்வையும் போகாத அந்த மேஜையின் இருட்டான மூலையில் வைத்தான்.

பிறகு வேண்டுமென்றே டயலில் தப்பான எண்களை அழுத்த எக்சேஞ்சிலிருந்து பதிவு செய்யப்பட்ட ஒரு பெண்ணின் குரல் இயந்திரத்தனமாய் பதில் கொடுத்தது.

''நீங்கள் டயல் செய்த எண்ணை தயவு செய்து சரி பார்க்கவும்.''

நான்கைந்து தடவை அதே எண்களை அழுத்திப் பார்த்துவிட்டு ரிஸீவரை வைத்தான்.

''லைன் கிடைக்கலை சிஸ்டர். என்கேஜ்ட் நான் வேற பக்கம் போய் ட்ரை பண்ணிக்கறேன்.''


''ஓக்கே...'' சொல்லி தலையசைத்த யாமினி ட்ரான்சிஸ்டரின் வால்யூமை மறுபடியும் பெரிதாக்கிக் கொண்டாள். வர்த்தக ஒலிபரப்பில் ஏதோ சீயக்காய் பவுடர் கம்பெனி தமிழ் சினிமா பாடல்களை தொகுத்து வழங்கிக் கொண் டிருந்தது. ''காதல் கடிதம் போடவே மேகம் எல்லாம் காகிதம்'' என்ற பாடல் ஒலித்தது.

சிங்காரம் வெளியே வந்து ஸ்கூட்டரை உதைத்துக் கொண்டே தன் மணிக்கட்டில் நேரம் பார்த்தான்.

நேரம் 10.15.

'இன்னும் பதினைந்து நிமிஷத்தில் பத்து பேராவது இந்த இடத்தில் உடல் சிதறி புகைந்து கொண்டிருப்பார்கள்.

ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்பினான் சிங்காரம்.



## 19

தலைமை டாக்டர் சரண் டெலிஃபோனில் இன்ஸ்பெக்டர் ஆதியிடம் பதறும் குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் ஆதி...! நான் டாக்டர்.சரண்.''

''சொல்லுங்கள் டாக்டர்.''

''ஒரு கவலை தரும் செய்தி...''

''என்ன டாக்டர்...?''

''முதலமைச்சர் கதிரவாணன் உடல்நிலை மிகவும் மோசமாகிக் கொண்டு வருகிறது. இதே நிலை நீடித்தால் அடுத்த பனிரெண்டு மணி நேரத்திற்குள் அவருடைய உயிர் பிரிந்துவிடுவது நிச்சயம். அவர் காப்பாற்றப்பட வேண்டுமானால்



உடனடியாக மூளைப் பகுதியில் ஒரு ஆப்ரேஷன் செய்யப்பட வேண்டும்.''

''டாக்டர் நவநீத்துக்கு இப்போது உடல்நிலை எப்படி இருக்கிறது...?''

''அவர் ஹைபர்டென்ஷன் பி.ப்பியிலிருந்து இன்னும் மீளவேயில்லை. படுக்கையை விட்டு எழுந்தால் தலை சுற்றி கீழே விழப் போகிறார். அவரால் இந்த ஆப்ரேஷனை செய்ய முடியாது.''

''வேறு டாக்டர்களை வைத்து முயற்சி செய்யலாமே டாக்டர்...?''

''வேலூர் ஹாஸ்பிடலில் டாக்டர் வெல்ஸ் இருக்கிறார். அவர் ஓரளவுக்கு இது மாதிரியான ஆப்ரேஷன்களைச் செய்வதில் கெட்டிக்காரர். அவரை தொடர்பு கொண்டு பேசியிருக்கிறேன். உடனே புறப்பட்டு வருகிறேன் என்று சொன்னவர் கடந்த நான்கு மணி நேரமாகியும் வந்த சேரவில்லை; மறுபடியும் ஹாஸ்பிடலுக்கு ஃபோன் செய்து கேட்டபோது அவர் இந்நேரம் சென்னை வந்து சேர்ந்து இருக்க வேண்டுமே' என்று சொன்னார்கள். வரும் வழியில் எதிரிகளால் அவர்க்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து இருக்குமோ என்று மனம் பயத்தில் கிடந்து தவிக்கிறது.''

ஆதி லேசாய் கோபப்பட்டார். ''டாக்டர் வெல்ஸ் வரப்போவதாக நீங்கள் முன்பே சொல்லியிருந்தால் பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாக பண்ணியிருக்கலாம்.''

''இனிமேல் நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்போம் மிஸ்டர் ஆதி. முதலமைச்சர்க்கு இன்னும் எட்டு மணி நேரத்தில் ஆப்ரேஷன் நடந்தாக வேண்டும்.''


''சரி... நீங்கள் ஆப்ரேஷனுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு இருங்கள். நான் போலீஸ் கண்ட்ரோல் ரூமை தொடர்பு கொண்டு சென்னை வேலூர் நெடுஞ் சாலையை கண்காணிக்கச் சொல்கிறேன்.''

''ப்ளீஸ் மிஸ்டர் ஆதி! இதில் நாம் செய்யும் ஒவ்வொரு விநாடி தாமதமும் முதலமைச்சரின் உயிர்க்கு ஆபத்தாக முடியும்...''

''கவலைப்படாதீர்கள் டாக்டர்! வேலூர் டாக்டர் வெல்ஸை இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் உங்கள் ஹாஸ்பிடலுக்கு கூட்டிக் கொண்டு வருவது என் பொறுப்பு. நீங்கள் ஆப்ரேஷன் தியேட்டரை மட்டும் தயார் நிலையில் வைத்திருந்தால் போதும்.''

''ஓ.கே. மிஸ்டர் ஆதி! உங்கள் பேச்சில் நம்பிக்கை வைத்து நான் ஆப்ரேஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறேன்.''

டாக்டர் சரண் ரிஸீவரை வைத்துவிட ஆதி ரிஸீவரை வைக்கத் தோன்றாமல் அப்படியே திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்.



## 20

சிகாக்கோவின் கொலம்பியா பிரஸ்பைடேரியன் ஹாஸ்பிடல்.

மார்ச்சுவரியில் இருந்தார்கள் நெல்ஸனும் சி.பி.ஐ.டைரக்டர் ஸ்டூவர்ட்டும்.

ஒரு பெரிய பாலிதீன் உறைக்குள் டாக்டர் ஜேக்ஸனின் உடல் முழுவதும் திணிக்கப்பட்டு வெளியே முகம் மட்டும் வெளுத்து தெரிந்தது.

ஹாஸ்பிடலின் தலைமை டாக்டர் சாலமன் கையில் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை வைத்துக் கொண்டு மெதுவான குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

''டாக்டர் ஜேக்ஸனை ஏரியில் அழுத்தி கொலை செய்து இருக்கிறார்கள். கொலை நடந்து நாற்பத்தெட்டு மணி நேரமாகியுள்ளது. உடல் நீரில் உப்பி ஊறிவிட்டதால் ஸ்பாட் போஸ்ட்



மார்ட்டம் செய்ய வேண்டி வந்தது. உடம்பில் துப்பாக்கி தோட்டா பாய்ந்ததற்கான அடையாளங்களே இல்லை. இது ஒரு ஆஸ்பீஷியல் டெத்...''

நெல்ஸன் கேட்டார். ''இதை கொலை என்று எப்படி சொல்கிறீர்கள் டாக்டர்...! மிஸ்டர் ஜேக்ஸன் தற்செயலாக ஏரியில் விழுந்து மூச்சுத் திணறி இறந்திருக்கலாம் இல்லையா...?''

''அப்படி அவரே ஏரியில் விழுந்து இறந்து இருந்தால் மூச்சு திணறும்போது மூக்கு வழியாக நுழைந்து நுரையீரல்களில் நீர் நிரம்பியிருக்கும். ஆனால் டாக்டர் ஜேக்ஸனின் உடலை போஸ்ட் மார்ட்டம் செய்து பார்த்தபோது அவருடைய நுரையீரல்களில் நீர் தேங்கி இருக்கவில்லை. கொலையாளிகள் டாக்டர் ஜேக்ஸனை மயக்கப்படுத்தியபின் ஏரி நீரில் அழுத்தி மூச்சை நிறுத்தி கொலை செய்து இருக்கிறார்கள். இன்னும் இரண்டு நாட்கள் கவனிக்காமல் இருந்திருந்தால் ஜேக்ஸனின் உடம்பு முழுவதும் ஏரி மீன்களால் அரிக்கப்பட்டு உருத்தெரியாமல் போயிருக்கும். ஃபிஷ்ஷிங் போன ஒருவர் பார்க்கப் போய் தகவல் கிடைத்தது...''

நெல்ஸன் சிகாக்கோ சிட்டி போலீஸ் கமிஷனரை ஏறிட்டார்.

''ஏரிக்கரையில் சீன் ஆஃப் க்ரைம் பார்த்தீர்களா..?''

''பார்த்தோம் ஸார்...''

''ஏதாவது உபயோகமான க்ளூ...?''

''ஒரே ஒரு தகவல் மட்டும் உபயோகமாய் கிடைத்தது.''

''என்ன தகவல்...?''

''வடக்கு ஏரிக்கரை பங்களாவில் இருந்த ஒரு பெண் அதிகாலை மூன்று மணியிலிருந்து காலை ஐந்து மணி வரைக்கும் ஒரு கார் ஏரிக்கரையில் நின்று கொண்டிருந்ததாகவும் இரண்டு பேர் காரின் டிக்கி பகுதியிலிருந்து மூட்டை மாதிரி

எதையோ தூக்கிக் கொண்டு போனதாகவும் சொல்லியுள்ளாள்...''

''ஆட்கள் எப்படி இருந்தார்கள் என்று கேட்டீர்களா...?''

''கேட்டோம். அந்த இருட்டில் அடையாளம் தெரியவில்லை என்று சொல்லிவிட்டாள். காரின் பதிவு எண்ணையும் அவளால் பார்க்க முடிய வில்லை. கார் வெள்ளை நிற லெஸன்ஸா என்பது மட்டுமே அவள் கொடுத்த தகவல்களில் உருப்படியான தகவல். சிகாக்கோ சிட்டியில் ஆயிரக்கணக்கான 'லெஸன்ஸா'க்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதில் அறுபது சதவீதம் வெள்ளை நிறம். இருப்பினும் வாகன போலீஸ் துறைக்கு தகவல் கொடுத்து அந்த வெள்ளை நிறக் காரை தேடச் சொல்லியிருக்கிறோம்...''

நெல்ஸன் தோள்களைக் குலுக்கி பெருமூச்சு ஒன்றை விட்டார்.

''எதிரிகளின் நோக்கம் என்ன என்பது தெரியவில்லை. டாக்டர் ஜேக்ஸனைப் போல ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு இந்தியாவுக்கு சென்ற ஒரு கிரிமினலைக் கொலை செய்து இருக்கிறார்கள். ஆனால் அந்த கிரிமினல் எதற்காக டாக்டர் ஜேக்ஸனின் முகத்தோடு இந்தியாவுக்கு போனான் என்று தெரியவில்லை. அதேபோல் இங்கே சிகாக்கோவில் கடத்தப்பட்ட டாக்டர் ஜேக்ஸன் எதற்காக கொலை செய்யப்பட்டார் என்பதும் தெரியவில்லை...''

சி.பி.ஐ.டைரக்டர் ஸ்டூவர்ட் பேச்சில் குறுக்கிட்ட சொன்னார்.

''ஸார்! டாக்டர் ஜேக்ஸனின் விவகாரத்தில் சில மர்ம முடிச்சுகள் இருக்கின்றன. அதில் பாதி முடிச்சுகள் இந்தியாவிலும் மீதி முடிச்சுகள் இங்கே சிகாக்கோவிலும் உள்ளன. இந்த விவகாரத்தில் இருக்கும் உண்மைகளை வெளியே கொண்டு வர சென்னையிலும் சிகாக்கோவிலும் ஒரே நேரத்தில் இன்வெஸ்டிகேஷனை ஆரம்பிக்க வேண்டும்.



அதற்காக இங்கேயிருந்து சி.பி.ஐ., எஃப் பி.ஐ.சார்பில் ஐந்து பேர் கொண்ட குழுவை ரகசியமாக சென்னைக்கு அனுப்ப வேண்டும்...''

''பலன் கிடைக்குமா...?''

''நம் உளவுத்துறைகள் இதுவரைக்கும் தோற்றதாக வரலாறு கிடையாது.''

''குழுவை என்றைக்கு அனுப்பப் போகிறீர்கள்.,. மிஸ்டர் ஸ்டூவர்ட்...?''

''உடனே...! இதில் யோசனை செய்து கொண்டிருக்க அவகாசம் இல்லை...''



## 21

நேரம் காலை 10.25.

பாபு புது ஸ்காட்ச் பாட்டிலை திறந்து வாசம் பிடித்து டம்ளரில் ஊற்றிக் கொண்டிருந்தபோது அறையில் இருந்த ட்யூப்லைட் இரண்டு முறை அணைந்து எரிந்தது.

பாட்டிலை அப்படியே வைத்துவிட்டு எழுந்தான். கதவுத் தாழ்ப்பாள் சரியாக போடப்பட்டிருக்கிறதாவென்று பார்த்துவிட்டு வேகவேகமாய் டாய்லெட்டுக்குள் நுழைந்தான். ஸிங்க்கின் வாட்டர் டேங்க் மூடியைத் திறந்து உள்ளேயிருந்த வயர்லெஸ் செட்டை எடுத்து காதுக்கும் வாய்க்கும் கொடுத்தான்.

''ஹலோ...''

மறுமுனையில் அமெரிக்க ஆங்கில உச்சரிப்போடு குரல் கேட்டது.

''பேசுவது யார்? சிங்காரமா?''

''இல்லை... நான் பாபு...''

''பாபுவா...? நான் நெல்ஸன்...''

பாபு பதட்டமாகி நல்ல ஆங்கிலத்தில் வேகமாய் பேச ஆரம்பித்தான்.

''சொல்லுங்க ஸார்... உங்களுடைய வயர்லஸ் தகவலுக்காகத்தான் நேற்று இரவிலிருந்து காத்துக் கொண்டு இருக்கிறோம்.''

''சிங்காரம் எங்கே...?''

''ஸார்...! அவன் அந்த கண்ணில்லாத பெண் யாமினியின் கதையை முடிக்க டைம்பாமை செட் பண்ண போயிருக்கிறான்.''

''காசியைப் போல் மாட்டிக் கொண்டுவிடப் போகிறான்...''

''சிங்காரம் எல்லாவிதமான முன்னேற்பாடு களோடும் போயிருக்கிறான். இன்னும் ஐந்து நிமிஷத்தில் அந்த பிரளயம் நடந்துவிடும்.''

''பாபு...! நான் சொல்வதை இப்போது கவனமாகக் கேள்...''

''சொல்லுங்கள் ஸார்...''

''நீயும் பாபுவும் சென்னையை விட்டு உடனடியாக வெளியேறி பக்கத்து மாநிலம் ஏதாவது ஒன்றுக்கு போய்விடவேண்டும்...''

''ஏன் ஸார்...?''


''நான் எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் இங்கே நடந்து கொண்டிருக்கின்றன. நாம் சென்னையில் கொலை செய்ய நினைத்த டாக்டர் ஜேக்ஸன் இங்கே சிகாக்கோவில் ஏரிக்கரையில் கொலை செய்யப்பட்டு கிடக்கிறார். டாக்டர் ஜேக்ஸன் என்று நினைத்து நீ கொலை செய்த நபர் ஒரு கிரிமினல். அவன் எதற்காக டாக்டர் ஜேக்ஸ்னைப்போல் ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு சென்னைக்குப் போனான் என்று தெரியவில்லை. எப்படியோ டாக்டர் ஜேக்ஸன் இப்போது உயிரோடு இல்லை. வேறு எந்தக் காரணத்துக்காகவோ வேறு யாரோ அவரைக் கடத்திக் கொண்டு போய் கொன்றுவிட்டார்கள்.



நான் உங்களுக்கு கொடுத்த கட்டளையை வேறு யாரோ நிறைவற்றியிருக்கிறார்கள். இப்போது சிகாக்கோ சி.பி.ஐ பிரிவிலிருந்து ஐந்து பேர் கொண்ட குழு அதிரடியாய் சென்னைக்கு வந்து தீவிரமாய் இன்வெஸ்டிகேட் செய்யப்போகிறது. அப்படி வருகிறவர்கள் அசகாய சூரர்கள். உங்கள் இரண்டு பேர்களையும் அடையாளம் தெரிந்து வைத்திருகிற அந்த உடல் ஊனமுற்ற பெண்களின் உதவியோடு உண்மைகளைத் தோண்டி எடுத்து உங்களையும் கண்டுபிடித்து விடுவார்கள். எனவே நீங்கள் இருவரும் உடனடியாக சென்னையிலிருந்து வெளியேறி ஏதாவது ஒரு பக்கத்து மாநிலத்துக்கு போய் விடுங்கள். பிரச்னைகள் எல்லாம் ஓய்ந்து ஆறியபின் சென்னைக்குத் திரும்புங்கள். அப்போது பேசிக் கொள்ளலாம்.''

''எஸ்...ஸார்...''

வயர்லஸ் அணைந்தது.



## 22

இன்ஸ்பெக்டர் ஆதி ஜீப்பில் வந்து இறங்க, ஜீப்புக்கு பின்னாலேயே டாக்டர் வெல்ஸின் கார் வந்து நின்றது.

வெல்ஸைக் கூட்டிக் கொண்டு உள்ளே போனார் ஆதி.

தலைமை டாக்டர் சரண் வேகவேகமாய் வராந்தாவில் எதிர்ப்பட்டார்.

''வாங்க மிஸ்டர் வெல்ஸ்...''

ஆதி குறுக்கிட்டு சொன்னார். ''சென்னை - வேலூர் ரோட்டில் ஒரு சாலை மறியல். நான்கு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு. அதில் டாக்டர்

வெல்ஸ் மாட்டிக்கிட்டார். அவருடைய செல்போனில் ஏதோ டெக்னிகல் ஃபால்ட், தொடர்பு கொள்ள முடியவில்லை...''

டாக்டர் சரண் புன்னகைத்தார்.

''நீங்கள் இப்படி லேட்டாய் வந்ததும் மிக மிக நல்லதாய் போயிற்று.''

வெல்ஸும், ஆதியும் திகைத்தார்கள்.

''லேட்டாக வந்தது நல்லதாக போயிற்றா...? டாக்டர் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?''

''என் அறைக்கு வாருங்கள், விபரமாய் சொல்கிறேன்...''

டாக்டர் சரண் தன் அறைக்குக் கூட்டிக் கொண்டு போய் இருவரையும் எதிரில் உட்கார்த்தி வைத்துக் கொண்டு ஓர் அர்த்த புஷ்டியோடு புன்னகைத்தார்.

''பீ ரிலாக்ஸ்...''

ஆதி படபடத்தார். ''ரிலாக்ஸ் செய்து கொள்ள இது நேரம் கிடையாது டாக்டர். முதலமைச்சர்க்கு இன்னும் எட்டு மணி நேரத்தில் ஆப்ரேஷன் செய்தாக வேண்டுமே...! இல்லாவிட்டால் அவர் உயிர் பிழைப்பது கடினம் என்று சொன்னீர்களே...?''

''பயப்படாதீர்கள். முதலமைச்சர் பிழைத்துக் கொள்வார்...''

''எப்படி சொல்கிறீர்கள்?''

''உள்ளே முதலமைச்சர்க்கு ஆப்ரேஷன் நடந்து கொண்டிருக்கிறது.''

''ஆப்ரேஷன் நடந்து கொண்டிருக்கிறதா?''

''எஸ்...''

'''ஆப்ரேஜன் செய்வது யார்...?''

''டாக்டர் ஜேக்ஸன்...!''

வெல்ஸும், ஆதியும் திடுக்கிட்டார்கள். ''டாக்டர் ஜேக்ஸனா...? அவர் தான் கொலை செய்யப்பட்டுவிட்டாரே...?''



''வெளியுலகத்துக்காக அவர் கொலை செய்யப்பட்டதுபோல் சிகாக்கோ சி.பி.ஐ.நடித்துக் காட்டிய நாடகம் அது...''

''நாடகமா...?''

''எஸ்...'' என்றபடி பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டார்கள் சிகாக்கோ சி.பி.ஐ.டைரக்டர் ஸ்டூவர்ட். டாக்டர் சரண் ஸ்டூவர்ட்

டாக்டர் சரண், ஸ்டூவர்டை ஆதிக்கும் வெல்ஸுக்கும் அறிமுகம் செய்து வைக்க, பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டார்கள்.

ஸ்டூவர்ட் நாற்காலியில் சாய்ந்து கொண்டே சொன்னார்.

''சிகாக்கோவில் ஒளிந்து கொண்டிருந்த ஒரு சீக்ரெட் வெளியே வருவதற்கு காரணமாக இருந்தவர் டாக்டர் சரண்தான்...''

சரண் புன்னகைத்தார். ''நோ... நோ. நான் அதுக்கு காரணம் கிடையாது. எல்லா உண்மைகளும் வெட்ட வெளிச்சத்துக்கு வர முக்கிய காரணமாயிருந்த ஒரு நபர் வெளியே விஸிட்டர்ஸ் அறையில் இருக்கிறார்.''

சொன்ன டாக்டர் சரண் இண்ட்டர்காம் ரிஸீவரை எடுத்து ரிசப்ஷனிட் பேச, அடுத்த இரண்டாவது நிமிடம் ஒரு இளைஞன் உள்ளே வந்தான்.

முப்பது வயது இருக்கலம். கெச்சலான உடம்புவாகு.

''வாங்க ஜெயச்சந்திரன்... இப்படி வந்து உட்காங்க...'' டாக்டர் சரண் காலியாய் இருந்த ஒரு பி.வி.ஸி.நாற்காலியைக் காட்ட அந்த ஜெயச்சந்திரன் உட்கார்ந்து கொண்டே எல்லோரையும் பார்த்துக் கும்பிட்டார்.

டாக்டர் சரண் தொடர்ந்தார்.

''ஜெயச்சந்திரன் ஒரு கேபிள் டி.வி. ஆபரேட்டர். கடந்த பத்து நாட்களுக்கு முன்பாக

ஒரு புதி டிஷ்ஆன்டெனாவை நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபட்டு அதை சரி பார்க்கும் பணியில் சேனல்களை மாற்றி மாற்றி பார்த்துக் கொண்டிருந்தபோது தொலைக்காட்சிப் பெட்டியில் திடீரென்று அந்த வயர்லெஸ் பேச்சு கேட்டது. சிகாக்கோ, டாக்டர் ஜேக்ஸன், பாபு, சிங்காரம், நெல்ஸன் போன்ற பெயர்கள் அடிபட்டது. அமெரிக்க அசென்ட் ஆங்கிலம் ஜெயச்சந்திரனுக்கு புரியாததால் அந்த வயர்லஸ் பேச்சில் ஆர்வம் காட்டாமல் இருந்துவிட்டார். ஆனால் இந்தியாவுக்கு வந்த டாக்டர் ஜேக்ஸன் கொலை செய்யப்பட்டதாக பேப்பரில் படித்ததும் இவர் உடனே உஷாராகி இந்த விஷயத்தை போலீஸில் சொல்லப் பயந்து தன் ப்ளாட்டில் குடியிருக்கும் ஒரு டாக்டரிடம் சொல்ல எனக்கு நண்பரான அந்த டாக்டர் எனக்கு விஷயத்தை தெரியப்படுத்தினார். நான் போலீஸ் க்யூ ப்ராஞ்சில் இருக்கும் எனக்கு வேண்டிய எஸ்.பி.யிடம் சொல்ல நாங்கள் தினமும் ஜெயச்சந்திரன் வீட்டுக்கு வந்து தொலைக் காட்சிப் பெட்டியை ஆன் செய்து அந்த வயர்லஸ் பேச்சை கேட்க ஆரம்பித்தோம். எங்களுக்கு விஷயம் விளங்க ஆரம்பித்தது. சிகாக்கோ விலிருந்து வரும் இந்த வயர்லஸ் பேச்சு யார் வீட்டு வயர்லஸ்ஸிலிருந்து கசிகிறது என்பதை 'சிக்னல் ஜெனரேட்டர்' வைத்துக் கண்டு பிடித்தோம். அது சிங்காரம், பாபு என்கிற இரண்டு பேர் குடியிருக்கும் வீடு. பி.ஈ.எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் வரை படித்த அந்த இரண்டு பேரும் வேலை கிடைக்காத காரணத்தால் கிரிமினல்களாக மாறியவர்கள். அந்நிய சதித் திட்டங்களை நிறைவேற்றுபவர்கள்..."

"அவர்களைப் பிடித்துவிட்டீர்களா... அவர்கள் இப்போது எங்கே?"

"க்யூ ப்ராஞ்ச் பிடியில் மாட்டிக்கிட்ட அவர்கள் இப்போது கஸ்டடி செல்லில் விசாரணைக்காக உட்கார வைக்கப்பட்டிருக்கிறார்கள்.



ஆதி கேட்டார்.

"தொலைக்காட்சி பெட்டியில் எப்படி டாக்டர் வயர்லஸ் பேச்சு கேட்டது...?"

கேபிள் ஆப்ரேட்டர் ஜெயச்சந்திரன் குறுக்கிட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"ஸார்! டி.வி.யில் உள்ள - ஐ.எஃப் என்று சொல்லப்படுகிற - இன்டர்ஃப் ப்ரீக்வென்ஸி என்கிற அமைப்புதான் ஆடியோவுக்கு பொறுப்பான விஷயம். இந்த ஐ.எஃப்பின் ரேஞ்ச் ஆறு மெகா வாட்ஸ்களுக்கும் குறைவானதுதான். இருந்தாலும் பாபு, சிங்காரம் குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்தில் நான் அமைத்த டிஷ் ஆன்டெனா இருந்த காரணத்தால் சிகாக்கோ வயர்லஸ் பேச்சு நான் செட் செய்த ஹை ப்ரீக்வென்ஸி சிஸ்டத்தில் மாட்டிக் கொண்டு ஒரு குறிப்பிட்ட சேனலைத் தட்டும்போது தொலைக் காட்சி பெட்டியின் வழியாகக் கேட்டது."

டாக்டர் சரண் தொடர்ந்தார். "இந்த சிகாகோ வயர்லஸ் பேச்சை நாங்கள் தொடர்ந்து உன்னிப்பாய் கேட்டு வந்ததின் காரணமாக கண்ணில்லாத பெண் யாமினியின் எஸ்.டி.டி. பூத்தில் வைக்கப்பட்ட டைம் பாமை கைப்பற்றி சரியான நேரத்தில் டிப்யூஸ் பண்ண முடிந்தது. சிங்காரத்தையும் ஸ்பாட்டிலேயே கைது பண்ண முடிந்தது."

"ரியலி இட் ஈஸ் ஏ க்ரேட் ஜாப்..." சந்தோஷப் பட்ட ஆதி குழப்பம் விலகாத முகத்தோடு கேட்டார்.

"டாக்டர் ஜேக்ஸன் எப்படி உயிரோடு சென்னைக்கு வந்து இப்போது சி.எம்.முக்கு ஆப்ரேஷன் செய்து கொண்டிருக்கிறார்...?"

ஸ்டுவர்ட் இடைமறித்தார். "அதற்கான பதில் இங்கேயிருக்கிறது மிஸ்டர் ஆதி! நடந்த சம்பவங்கள் இவைதான்.

புகழ்பெற்ற மருத்துவரான டாக்டர் ஜேக்ஸனின் உயிர்க்கு சிகாகோவில் இருந்த இரண்டு கோஷ்டிகள் குறி வைத்து வெகுநாளாய் காத்து இருந்தன. ஒரு கோஷ்டி அரசியல். இன்னொரு கோஷ்டி கிரிமினல். கிரிமினல் கோஷ்டிக்கு லீடர் ப்ரெட்ரிக். அரசியல் கோஷ்டிக்கு லீடர் நெல்ஸன். டாக்டர் ஜேக்ஸனுக்கு அமெரிக்க அரசு சர்வதேச அளவில் க்ரீன் பாஸ்போட் கொடுத்துள்ளது. இதனால் டாக்டர் ஜேக்ஸன் எந்த நாட்டு விமான நிலையத்திலும் 'கஸ்டம்ஸ்' என்கிற பெயரில் சோதனை செய்யப்படமாட்டார். அவருடைய உடமைகளைத் தொட்டுப் பார்க்கக் கூட கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு உரிமையில்லை. இந்தச் சலுகையைத் தெரிந்து கொண்ட க்ரிமினல் கோஷ்டியின் தலைவன் நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள அரிய வைரங்களை இந்தியாவுக்குக் கடத்திக் கொண்டு போவதற்காக டாக்டர் ஜேக்ஸனைப் போலவே ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு மாதக்கணக்கில் காத்துக் கொண்டு இருந்திருக்கிறான்.

தமிழ்நாட்டு முதலமைச்சர்க்கு ஆப்ரேஷன் செய்வதற்காக டாக்டர் ஜேக்ஸன் இந்தியா புறப்பட்டுப் போகிறார் என்று தெரிந்ததுமே க்ரிமினல் கோஷ்டி சுறுசுறுப்பு ,அடைந்தது. டாக்டர் ஜேக்ஸன் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டார். அவரை ஒரு மறைவிடத்தில் அடைத்து வைத்துவிட்டு ப்ளாஸ்டிக் சர்ஜரி உபயத்தால் டாக்டர் ஜேக்ஸனாக மாறிய க்ரிமினல் கோஷ்டியின் தலைவன் நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள வைரங்களை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்கு புறப்பட்டான். சென்னைக்கு வந்தான்.

வைரங்களை உரிய பார்ட்டியிடம் கொடுத்து விட்டு உடல்நலம் சரியில்லாததுபோல் நடித்து சிகாக்கோ திரும்ப இருந்த அவனை டாக்டர்



ஜேக்ஸன் என்று நினைத்து பாபு கொலை செய்தான்...''

இன்ஸ்பெக்டர் ஆதி குறுக்கிட்டு கேட்டார். ''எதற்காக இந்தக் கொலை...?''

ஸ்டூவர்ட் தொடர்ந்தார்.

''இந்த இடத்தில்தான் அரசியல் கோஷ்டி வருகிறது. சென்னை எம்பஸியில் நல்ல பதவியில் இருக்கும் நெல்ஸன் அமெரிக்காவில் உள்ள ஒரு சிறிய அரசில் கட்சிக்கு தலைவர். டாக்டர் ஜேக்ஸனும் அந்த அரசியல் கட்சிக்கு ஒரு மாகாணத் தலைவர். சமீப காலமாக டாக்டர் ஜேக்ஸனின் புகழ் அதிகரிக்கவே தன்னுடைய கட்சித் தலைமைக்கு எங்கே போட்டியாளராக வந்துவிடுவாரோ என்கிற பயத்தில் அவரைத் தீர்த்துக்கட்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தார் நெல்ஸன். சிகாக்கோவில் அவரைத் தீர்த்துக் கட்டினால் போலீஸார்க்கு தன்மேல் சந்தேகம் வரலாம் என்று நினைத்து - டாக்டர் ஜேக்ஸன் இந்தியாவுக்கு போகும்போது - தீர்த்துக் கட்டிவிட திட்டம் போட்டு காரியத்தில் இறங்கினார். இதற்காக சென்னையில் உள்ள படித்த இரண்டு கிரிமினல்களான பாபுவையும், சிங்காரத்தையும் பிடித்தார். கொலைக்கான திட்டம் தீட்டப் பட்டது.''

ஆதி இடைமறித்து சொன்னார்.

''இப்போது புரிகிறது! டாக்டர் ஜேக்ஸனைப் போல் ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு வந்த கிரிமினல் கோஷ்டி தலைவனை பாபு உண்மையிலேயே டாக்டர் ஜேக்ஸன்தான் என்று நினைத்துக் கொலை செய்துவிட்டான்...''

''அதேதான்...! சென்னையில் அந்த சம்பவம் நடந்த அதே தினத்தன்று கிரிமினல் கோஷ்டியால் கடத்தப்பட்ட டாக்டர் ஜேக்ஸன் எப்படியோ தப்பித்து நள்ளிரவில் என் வீட்டுக்கு வந்து

தஞ்சமடைந்தார். டாக்டர் ஜேக்ஸன் உயிரோடு இருக்கிற விஷயத்தை வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தினால் குற்றவாளிகள் உஷாராகி தப்பிவிடுவார்கள் என்று நினைத்து அவர் இறந்து விட்டதைப்போல் 'எஸ்டாப்ளிஷ்' பண்ணினோம். இதற்காக ஜேக்ஸன் இறந்தவரைப்போல் ஒரு மணி நேரம் நடித்தார். நெல்ஸனை ட்ராப் செய்வதற்காக போடப்பட்ட திட்டத்தில் அவரும் நன்றாகவே ஏமாந்துபோய் மார்ச்சுவரியிலிருந்து திரும்பியதுமே சென்னைக்கு வயர்லஸ் செய்து பாபுவிடம் பேச நெல்ஸன் அதிகாரபூர்வமாய் மாட்டிக் கொண்டார். இந்த சம்பவங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் போதே அமெரிக்க அரசு தமிழ்நாட்டு முதலமைச்சரைக் காப்பாற்றுவதற்காக ஒரு தனி விமானம் மூலம் டாக்டர் ஜேக்ஸனை சென்னைக்கு அனுப்பி வைத்தது. சி.பி.ஐ. விசாரணைக் குழுதான் அவரைப் பாதுகாப்பாக இந்தியாவுக்கு கூட்டிக் கொண்டு வந்தது.''

ஸ்டூவர்ட் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மேஜை மேல் இருந்த இன்டர்காம் முணுமுணுத்து கூப்பிட்டது.

டாக்டர் சரண் ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''


டாக்டர் ஜேக்ஸன் ஆப்ரேஷன் தியேட்டரில் இருந்து பேசினார்.

''உங்கள் தமிழ்நாட்டு முதலமைச்சர்க்கு ஆப்ரேஷன் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. இனி அவர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. இப்போது நான் ஆப்ரேஷன் தியேட்டரை விட்டு வெளியே வந்து கொண்டிருக்கிறேன்...''

''வாருங்கள் மிஸ்டர் ஜேக்ஸன்! இங்கே உங்களுக்காக நல்ல நணபர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி உங்கள் வாழ்க்கையில் எதிரிகள் இல்லை...''

- சொல்லிவிட்டு சிரித்தார் டாக்டர் சரண்.





## 23

தொலைக்காட்சிப் பெட்டியில் சேலைத் தலைப்பை இழுத்து போர்த்திய அந்த பெண் தலைப்புச் செய்தியாக அன்றைய செய்திகளில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''உடலில் ஊனங்கள் இருந்தாலும் மனதிலும் செயலிலும் ஊனம் இல்லாத யாமினி, நந்தினி, சாந்தினி மூன்று பேர்க்கும் அவர்களுடைய துணிச்சலைப் பாராட்டி ஜனாதிபதி விருது வழங்கியுள்ளார். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க போலீஸார்க்கு பொதுமக்கள் தாராளமாய் உதவி செய்ய முன்வராத இந்தக் காலத்தில் உடலளவில் ஊனம் அடைந்த பெண்கள் மூன்று பேர் தங்கள் உயிர்களை துச்சமாய் மதித்து போலீஸார்க்கு உதவியுள்ளார்கள். இந்த மன உறுதி எல்லா மக்களுக்கும் வந்துவிட்டால் நாட்டில் குற்றங்கள் குறையும். குற்றவாளிகள் உருவாக மாட்டார்கள் என்று ஜனாதிபதி தன் அறிக்கையில் கூறியுள்ளார். மேலும் அவர் கூறியதாவது...

பின்னணியில் செய்தி ஒலிக்க -

டி.வி.திரையில் -

யாமினி

நந்தினி

சாந்தினி - மூன்ற பேரின் முகங்களும் க்ளோஸப்புக்கு வந்தன.

**(முற்றும்)**